மன்றம்

வார ஏடு — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 24 ★ 13-10-57 சென்னை ★ விலை 16 காசு

இந்தி எதிர்ப்புப் போராட்டம்!

—(0)—

1937 - 1957

—(0)—

அன்றும் இன்றும்

—(0)—

இரா. செழியன்

இந்தி ஆதிக்கம் நான்கு பக்கங்களிலும் பரவி வருகிறது! இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்று போராட வேண்டிய நெருக்கடியான கட்டத்தில் தென்னாடு நிறுத்தப்பட்டுள்ளது! இப்பொழுது இந்தப் போராட்டத்தில் தென்னாடு எந்த அளவுக்கு வெற்றி காண்கிறதோ, தென்னாட்டினராகிய நாம் எவ்வளவு தூரம் இந்தி வெறியை விரட்டித் தள்ளுகிறோமோ, அந்த அளவுக்குத் தான் தென்னாட்டின் உரிமைகள் காப்பாற்றப்படும். இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து நிற்பதில் நாம் பெறுகிற வெற்றி தான் தென்னாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதாக இருக்கும். இந்தி ஆதிக்கம் தென்னாட்டில் நிலைபெற வழியேற்பட்டு விட்டால், தென்னாடு வட நாட்டின் அடிமை என்ற நிலைமை ஏற்படும். தென்னாட்டின் தனிப்பட்ட மொழிகளும், வரலாறும், பண்பாடும், உரிமைகளும் இந்தி ஆதிக்கத்தின் கீழ் உருத்தெரியாமல் சிதைக்கப்பட்டு விடும்!

இந்தி ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடிகள் தென்னாட்டைச் சூழ வளைத்துக் கொண்டு வருகின்றன. அந்தப்பிடியிலிருந்து தப்பினால்தான், அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளிலிருந்து வஞ்சகத் திட்டங்களிலிருந்து தப்பினால் தான், திராவிடத்திற்கென்று வரலாற்றில் கூறத்தக்க அளவு ஏதாவது மிஞ்சும்! வருகின்ற இந்தி ஏகாதிபத்தியம் தென்னாட்டு மொழிகளை மட்டுமல்ல, இந்த நாட்டு மக்களின் எதிர்கால வாழ்வையே அழித்தொழிக்கும் வெறித்தன்மையுடன் இருக்கிறது!

படையெடுத்து வரும் இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்றிட முரசு கொட்டும் நாள் அக்டோபர் 13!

மீண்டுமொரு இந்தி எதிர்ப்பு அறப்போருக்கு வீரர்களை அழைத்திடும் நாள் அக்டோபர் 13!

மீண்டுமொரு இந்தி எதிர்ப்பு அறப்போர்! நமது கவனமெல்லாம் முதலில் நடந்த அறப்போருக்குச் செல்கிறது! 1937இல் துவங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டம் நினைவுக்கு வருகிறது!

1937இல் முதல் தடவையாக கட்டாய இந்திக்கு எதிர்ப்பு கிளம்பியது! மங்கிக் கிடந்த மொழிப்பற்று தலை நிமிர்ந்தது, தேங்கிக் கிடந்த நாட்டில் உணர்ச்சி வெள்ளம் அலை மோதியது! அதற்கு முன் என்றுமில்லாத அளவு பல்வேறு கொள்கையினரும் கோட்பாடு உடையவர்களும், சமயத் துறவிகளும் சமயங்களைக் கடந்தவர்களும், தமிழறிஞர்களும் அரசியல் வாதிகளும்-பிறவற்றால் பாகுபாடும் கருத்து வேறுபாடும் மிகுதியாக உள்ளவர்கள் அனைவரும்-இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஒன்றாக அணிவகுத்து நின்றனர்! "இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம், எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!" என்ற அழைப்பொலிக்குப் பதில் கொடுத்துப் பல்லாயிரவர், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்தனர்! "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, நம்மை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை" எனப் பலர் அடக்கு முறையை எதிர்த்து நின்றனர், தடியடி தாங்கினர், சிறைத் தண்டனைகளை ஏற்றனர்! பச்சிளங் குழந்தைகளை அணைத்துக்கொண்டே தாய்மார்கள் சிறைச்சாலைக்குச் சென்ற காட்சியைத் தமிழகம் என்றைக்கும் மறக்காது! தாலமுத்து-நடராசன் என்ற இரு அறப்போர் வீரர்கள் சாவையே அணைத்து கொண்டனர்! அன்று அவர்கள் செய்த தியாகத்தால், அணையவிருந்த தமிழ்ச்சுடர் அணையாமல் காப்பாற்றப்பட்டது!

அன்று காப்பாற்றப்பட்ட சுடர்-அன்று காட்டப்பட்ட உணர்ச்சி வரவர வளர்ந்தது, வலிவடைந்தது, பொலிவுபெற்றது! "தமிழ் வாழ்க" என்ற குரல், "தமிழ் நாடு தமிழருக்கே!" என்ற உணர்வைத் தந்து, "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற உறுதியான கொள்கையடிப்படையைத் தந்தது! புதியதொரு விடுதலைப் படையை உண்டாக்கியது! திராவிடம் பற்றிய உணர்வு, திராவிடம் தேய்ந்துள்ள நிலை, வடநாடு தென்னாட்டை ஆட்டிப் படைக்கும் சூழ்ச்சித் திட்டங்கள் மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன! தென்னாட்டின் அரசியலில் ஒரு திருப்புமுனையாக திராவிட இயக்கம் உருவெடுத்தது, வளர்ந்தது, வளர்ந்து வருகிறது. வளர்ந்து கொண்டே இருக்கிறது!

1937இல் இங்கு இந்தி கட்டாயப் படுத்தப்பட்ட பொழுது சென்னை மாநிலத்தில் காங்கிரசு ஆட்சி இருந்தது; டில்லியில் வெள்ளையர் ஆட்சி இருந்தது! இன்று, 1957இல், மாநிலத்திலும் மத்திய அமைப்பு இரண்டிலும் காங்கிரசு ஆட்சி புரிகிறது!

1937இல் இந்தியுமல்ல, உருதுவுமல்ல, இரண்டிற்கும நடுத்தரமான இந்துஸ்தானி என்பதை மகாத்மா காந்தியும் காங்கிரசுக் கட்சியும் வலியுறுத்தின! இந்துஸ்தானியை தேவநாகரி எழுத்துக்களிலும் எழுதலாம், உருது எழுத்துக்களிலும் எழுதலாம் என அன்று கூறினார்கள். இப்பொழுது இந்துஸ்தானியல்ல, உருது அல்ல, இந்தி மட்டும் தான் காங்கிரசுக் கட்சியினரால் வலியுறுத்தப்படுகிறது! அதிலும் இந்தியை தேவநாகரி எழுத்துக்களில்தான் எழுதவேண்டும் எனத் தீர்மானம் செய்துள்ளனர்!

அன்றைய தினம் கல்வித் துறையில் இந்தி கட்டாயப்படுத்தப்பட்டது. இன்று டில்லி ஆட்சியாளர்களின் கீழ் இருக்கும் எல்லா அமைப்புகளிலும் இந்தி கட்டாயப்படுத்தப்படுகிறது! அன்று கல்வி சம்பந்தப்பட்ட மொழிப் பிரச்சினையாக மட்டும் இந்தி ஆரம்பித்தது! இன்று தபால்-தந்தியில் புகுந்துள்ளது, வானொலியில் புகுந்து விட்டது, இரயில்வே நிலையங்களில் புகுந்து வருகிறது, செய்திப் படங்களில் வருகிறது, அரசாங்க அறிக்கைகளில் ஒட்டி வருகிறது, அலுவலகப் பெயர்களில் சேர்ந்துவருகிறது, கடைசியாக அரசாங்க மொழியாகவும் அது வர முயற்சிக்கிறது! 1937இல் கல்வித்துறையில் மட்டும் ஆரம்பித்த இந்தி, இப்பொழுது நான்கு பக்கத்திலும் சூழ்ந்துள்ளது!

அன்று மாநில ஆட்சிமட்டும் தனிப்பட்ட முயற்சியாக இருந்தது, டில்லியிலிருந்த வெள்ளையர் ஆட்சி அதில் கவலைப் படாமல் இருந்தது! இன்று மாநில ஆட்சிகள் தயங்குகின்றன. டில்லியிலிருக்கும் ஆட்சிதான் பெரு முயற்சியுடன் இந்தியைக் கட்டாயப் படுத்துகிறது!

1937இல் இருந்ததை விட 1957இல் இந்தியைக் கொண்டுவர அதிகமான அதிகார பலம் இருக்கிறது. அப்பொழுதிருந்ததைவிட மாநில அரசாங்கங்கள் பலமொடுங்கியும் டில்லியிலுள்ள மத்திய அராங்கத்திடம் அதிகாரங்கள் அனைத்தும் குவிக்கப்பட்டும் இருக்கின்றன மத்திய அரசாங்கத்தில் இதற்கு முன் என்றுமில்லாதவாறு, இந்தி வெறியர்களின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கிறது, டில்லியிலுள்ள

அக்டோபர் 13

இந்தி எதிர்ப்பு நாள்!

தென்னாட்டின்மீது

இந்தி ஏகாதிபத்தியம் படையெடுத்துவருகிறது!

நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

அரசாங்கத்தில் இந்தி!

ரேடியோவில் இந்தி!

செய்திப்படத்தில் இந்தி!

தந்தி — தபாலில் இந்தி!

இரயில்வேயில் இந்தி!

வாணிபத்தில் இந்தி!

உங்கள் திருநாட்டைச் சுடுகாடாக்கும் செந்தி வருகிறது!

உங்கள் வளநாட்டை அடிமைக்காடாக்கும் இந்தி வருகிறது!

விரட்டுங்கள், விரட்டுங்கள், விரட்டியடியுங்கள்!

அக்டோபர் 13—இல்

ஊர்வலங்கள் நடத்துக!

எதிர்ப்பொலி கிளப்புக!

தமிழர்கள் காட்டும் எதிர்ப்பை தரணி அறியச் செய்க!

ஆட்சி பீடம் அவர்களிடமிருக்கிறது, பாராளு மன்றத்தில் அவர்கள் கட்டுப்பாடாக பலம் பெற்றிருக்கிறார்கள், அரசியல் சட்டத்தில் இந்திக்குமுதலிடம் தரப்பட்டிருக்கிறது, அரசாங்க மொழியாக்க வேண்டுமென அரசாங்கச் சட்டத்தில் காலம் வரையறுக்ப் பட்டுள்ளது, இந்தியைப் பரப்ப கோடிக் கணக்கில் பணத்தைக் கொட்டிக் கொடுக்க டில்லி அதிகாரம் தயாராக இருக்கிறது! இவையெல்லாம் இருபது ஆண்டுக்கு முன் இல்லாத சூழ் நிலை, இப்பொழுது உருவாகியுள்ள நிலை! இந்தி ஆதிக்கத்தைப் பரப்பிட டில்லியில் குவித்து வைக்கப்பட்டுள்ள அதிகார பலம் முன்னைவிடப் பல மடங்கு அதிகமானது! கணக்கிட்டுப் பார்த்தால் வியப்பைத் தரும் அளவு, அரசாங்க அளவில் இந்திக்குப் பக்க பலம் சேர்ந்துள்ளது!

இது ஓர் புறம், இதற்கு மாறுபட்ட மற்றொரு பக்கத்தைப் பார்க்கவேண்டும்!

1937இல் சென்னை மாநிலத்தில் இந்தியைக் கொண்டுவரக் காரணமாக இருந்தது அப்பொழுது பதவியிலிருந்த காங்கிரசு மந்திரிசபை! அந்த மந்திரிசபையில் இருந்தவர்கள்:

1. சி. இராசகோபாலாச்சாரியார்,
2. டாக்டர் பி. சுப்பராயன்
3. டி. பிரகாசம்.
4. டாக்டர் டி. எஸ். எஸ். இராசன்
5. எஸ். இராமனாதன்
6. கோபால ரெட்டி
7. யாகூப் ஹாசன்
8. முனுசாமிப் பிள்ளை
9. சி. ஜே. வர்க்கி
10. ராமன் மேனன்

இந்தப் பத்துப் பேர் கொண்ட காங்கிரஸ் மந்திரிசபை இருந்தபொழுதான், இந்தி கொண்டுவரப்பட்டது. இந்தியைக் கொண்டுவர முக்கியமாக இருந்த இவர்கள் இப்பொழுது எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்கலாம்.

பத்துப் பேர்களில், டி. பிரகாசம், டாக்டர் இராசன், யாகூப் ஹாசன், முனுசாமிப் பிள்ளை, வர்க்கி, ராமன் மேனன் ஆகிய ஆறு பேர்கள் இப்பொழுது உயிரோடு இல்லை.

தோழர் எஸ். இராமனாதன் அவர்கள் அரசியலிலிருந்து விலகி, இந்திய பகுத்தறிவு இயக்கத்தில் பணியாற்றிவருகிறார். இந்தியைக் கட்டாயப்படுத்துவதை அவர் ஆதரிப்பார் என்று கூறமுடியாது.

திரு. கோபால ரெட்டி அவர்கள் இப்பொழுது ஆந்திர மாநிலத்தில் மந்திரியாக இருக்கிறார். மந்திரி பதவிகளில் இருப்பவர்கள் தமது கருத்துக்களை-அதுவும் முரண்பட்டதாக இருந்தால் எளிதில் வெளியிடுவதில்லை.

ஆனால் இவர்களெல்லாம் போக அன்றைய காங்கிரசு மந்திரிசபையில் மிக முக்கியமாக இருந்தவர்கள் ஆச்சாரியார் அவர்களும் டாக்டர் சுப்பராயன் அவர்களும் ஆவார்கள்.

ஆச்சாரியார் அவர்கள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார் "ஒவ்வொரு மாநிலத்தின் சம்மதத்தையும் பெறாமல், இந்தியை ஆட்சிமொழியாக ஆக்குவது அநியாயமானது-நேர்மையற்றது-வன்மையாகக் கண்டிக்கத்தக்கது." அது மட்டுமல்ல இந்தியை எல்லோருக்கும் பொதுவான மொழியாக ஆக்கமுடியுமா என்றால் "இந்தி என்றைக்காவது ஒரு நாள் இந்தியாவின் தேசிய மொழியாகுமென எண்ணுவது கூட வெறும் பகற் கனவு!" என அவர் கூறுகிறார். இந்தி அரசாங்க மொழியாக இருக்கக் கூடாது என்பது மட்டுமின்றி "என்றைக்கும் ஆங்கிலமே அரசாங்க மொழியாகவும், மாநிலங்களுக் கிடையே தொடர்பு மொழியாகவும் நீடிக்கவேண்டும் என்பது என் கருத்து" எனவும் அவர் தெரிவித்துள்ளார்!

இரண்டாவதாக டாக்டர் சுப்பராயன் அவர்கள், கெர் கமிட்டி அரசாங்க மொழி பற்றி விடுத்த அறிக்கையில், மிகத் துணிவுடன் "இந்த அறிக்கை முழுவதிலும், இந்தி பேசாத மக்களுடைய மனப்பான்மையையும், விருப்பங்களையும் கருத்துக்களையும் அறிந்து கொள்வதற்கான முயற்சி துளியும் எடுத்துக் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை" என்று கண்டன அபிப்பிராயத்தை எழுதி வைத்தார். மேலும் "இந்திய தேசிய மொழிகளில் ஆங்கிலமும் ஒன்றாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அரசாங்க மொழியிலிருந்து ஆங்கிலத்தை விலக்குவது இந்திய அரசியல் அமைதியைக் கெடுப்பதாகும்" எனவும் அவர் ஒரு கூட்டத்தில் பேசியுள்ளார்.

1937இல் இந்தி வரவேண்டுமெனக் கூறிய இரு முக்கியமானவர்களே இன்று "இந்தி அரசாங்க மொழியாக வேண்டாம்!" என்று கூறுகின்றனர்! மற்றவர்கள் கூறுவதிலாவது ஏதாவது உள் அர்த்தங்கள் கண்டுபிடிக்கப்படலாம். அன்று இந்தி வரவேண்டுமென்றுகூறியவர்களே இன்று அது வேண்டாம் என்று கூறுகிறார்கள், மற்றவர்களைவிட அதிகமான காரணங்களைக் காட்டி!

1937இல் இந்தி வருவதற்கு தென்னாட்டில் எதிர்ப்பு இருந்தபோதிலும், ஆதரித்துப் பேசவும் சிலர் இருந்தார்கள். பெரும்பாலான பத்திரிக்கைகள் இந்தி எதிர்ப்புக்கு எதிராக இருந்தன! இன்று இந்தியை ஆதரித்துப்பேச, தென்னாட்டில் குறிப்பிடத்தக்க அரசியல் தலைவரோ, பத்திரிக்கைகளோ எதுவும் கிடையாது! காங்கிரசுக்காரர்களாயிருந்தாலும் எதிர்க்கட்சியினராயினும் இந்தி வருவதற்கு யாரும் ஒத்துழைக்க வரவில்லை! பதவியிலிருப்பவர்கள் ஒதுங்கி நிற்கிறார்கள், பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் ஒத்திப்போடுகிறார்கள், ஆனால் மிகப் பலர் "இந்தி வருவது கூடாது!" என மறுத்துப் பேசுகிறார்கள். தென்னாட்டார் இந்தியை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை டில்லி ஆட்சியாளர்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது!

இது 1937இல் இல்லாத சூழ்நிலை! "எந்த அளவுக்கு எதிர்ப்பு?" என்பதில் வேண்டுமானால் கணக்குப் பார்க்கலாமே தவிர, இந்திக்கு ஆதரவு என்று கணக்கிட தென்னாட்டில் குறிப்பிடத் தகுந்த வகையில் யாரும் கிடையாது!

தென்னாட்டில் மட்டு மல்ல, இந்திக்குக் கடுமையான எதிர்ப்பு வங்காளத்திலும், மராட்டியத்திலும் கிளம்பியுள்ளன! ஏன், டில்லிப் பட்டணத்திலேயே இந்திக்கு எதிர்ப்பு சூழ்கிறது! பொதுவாக இந்தியல்லாத மற்ற மொழியினரிடமிருந்தும் எதிர்ப்பு மூண்டுள்ளது! இது 1937இல் இல்லாத ஒரு சூழ்நிலை!

ஒரு புறம் டில்லியில் இந்திக்கு ஆதரவாக அரசியல் அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளது! மற்றொரு புறத்தில், இந்தி ஆதிக்கத்துக்கு எதிராக மக்களின் எழுச்சி திரண்டு நிற்கிறது! மக்களின் உணர்ச்சியை மதிக்க மறுத்த அரசியல் ஆதிக்கம் எதுவும் நீண்ட நாள் மண்ணில் நிலை பெற்றதில்லை. இந்த வரலாற்று உண்மையை நாம் செய்து காட்டுவோமாக!

மன்றம்

ஞாயிறு 13—10—57 சென்னை

இந்தி எதிர்ப்பு நாள்!

★ இரா நெடுஞ்செழியன்.

பரவி வரும் இந்தி ஏகாதிபத்தியத்துக்கு தென்னாட்டின் எதிர்ப்பைக் காட்டும் நாளாக அக்டோபர் 13 வருகிறது!

டில்லி ஆதிக்கக்காரர்கள் எப்படியேனும் இந்தியத் துணைக்கண்டம் முழுவதையும் இந்தி ஏகாதிபத்தியத்தின் கீழ் கொண்டுவரப் பாடுபடுகின்றனர். தாங்கள் எடுத்துள்ள வேலை மிகக் கடினமானது என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். வரலாற்றுப்படியும், மொழியியல்படியும், இந்தியா முழுவதையும் குறிப்பாகத் தென்னாட்டை இந்தியின்கீழ் அடிமைப்படுத்த முடியாது என்பதை அவர்கள் நம்மைவிட நன்றாக உணர்கிறார்கள். தாங்கள் எடுத்துக்கொண்ட வேலை மிகக் கடினமானது, நேர்வழியில் வெற்றிகாண முடியாதது என்று எண்ணுகிற காரணத்தால்தான் அவர்கள் இந்தியைப் பரப்புவதில் தந்திரங்களைக் கையாளுகிறார்கள், சூழ்ச்சி செய்கிறார்கள், சதித்திட்டங்களை வகுக்கிறார்கள். "மற்ற பிரச்சினைகளில் காட்டுகின்ற அவசர—ஆத்திர உணர்ச்சிகளை விட்டு, இந்தியைப் பொறுத்தமட்டில் டில்லி ஆட்சியாளர்கள் மிக ஜாக்கிரதையோடு இன்றையத்தினம் பதுங்கிப் பதுங்கி, வருவதற்குப் புதர்களைத் தேடித் தேடி அலைந்துகொண்டிருக்கிறார்கள்" என்று தோழர் சம்பத் அவர்கள் திருவண்ணாமலை மாநாட்டில் குறிப்பிட்டதைப்போல, டில்லி ஆதிபத்தியக்காரர்கள் இந்த ஒரு பிரச்சினையில்மட்டும் ஆணவத்தைக் குறைத்துக்கொண்டு, ஆவேசப் பேச்சுகளை அடக்கிக்கொண்டு, அமைதியுடன் காரியமாற்றுகிறார்கள். அமைதியான முறையில் என்றால், சூழ்ச்சியால், சதியால், திரைமறைவு வேலையால் இந்தியைப் பரப்பவேண்டுமென அவர்கள் திட்டமிடுகிறார்கள். அந்தவகையில் மட்டும்தான் இந்தி ஏகாதிபத்தியத்தை நிலைபெறச் செய்யமுடியுமென்று அவர்கள் நினைக்கிறார்கள்.

இந்தியைப் பரப்புவது என்பது வெறும் மொழிப்பிரச்சினையாக மட்டுமல்ல, அது நமது வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் ஆட்டிப்படைக்கும் தன்மையாக உள்ளது. டில்லியில் வளர்ந்துள்ள அரசியல் ஏகாதிபத்தியத்தின் மற்றொரு தோற்றமாக இந்தி ஏகாதிபத்தியம் வருகிறது. இந்தியாவின் பல்வேறு மொழியினரையும் நாட்டுப் பண்புகளையும் அழித்துவிட்டு, ஒரே அரசியல் ஆட்சி, ஒரே அரசியல் அமைப்பு, ஒரே மொழி என்ற ஏகாதிபத்திய நோக்கத்துடன் இந்தி மொழி கட்டாயப்படுத்தப்படுகிறது. ஆனால் அந்த நோக்கத்தை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல், முதலில் குறிப்பிட்டதைப்போல "பதுங்கிப் பதுங்கி," அந்த ஆதிக்கம் பரப்பப்படுகிறது.

இந்தி வருவது மொழிப்பிரச்சினையாக மட்டுமிருந்தால், மொழியாராய்ச்சியாளர்களிடம், கல்வி நிபுணர்களிடம், மாநிலங்களின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள சட்டமன்றங்களிடம், கடைசியாக அந்தந்த வட்டாரத்து மக்களிடம், அந்த மொழிப்பிரச்சினை வைக்கப்பட்டிருக்கவேண்டும். ஏற்ற மொழிதானா? ஆற்றலுள்ள மொழிதானா? தேவையுள்ள மொழிதானா? என அவரவர்கள் எண்ணப்படி விட்டிருக்கலாம். இந்தி வருவது வெறும் மொழிப்பிரச்சினையாக மட்டுமிருந்தால், கல்லூரிகளில் கல்வி நிலையங்களில் விவாதிக்கப்படும் பிரச்சினையாக இருந்திருக்கும். ஆனால் அரசியல் ஆதிக்கத்தின் ஒரு அங்கமாக இந்தி இருக்கின்ற காரணத்தால், கல்வி நிலையங்களில் கற்பிக்கப்படும் நிலையைத்தாண்டி, அரசாங்க அமைப்புகளின்மூலம் கட்டாயப்படுத்தப்படுகிறது.

தபால்—தந்தி அலுவல்களில் இந்தி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. கார்டு, கவர்கள் முழுவதும் இந்தியில் அச்சடிக்கப்படுகின்றன. மணியார்டர்களில் இந்தி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன, தந்தியனுப்ப இந்தி பயன்படுத்தப்படுகிறது. இந்தி எழுதப்படாத, பேசப்படாத, இன்னுஞ் சொல்லப்போனால் கேட்கக்கூடப்படாத பகுதிகளில் இந்தியில் அச்சிடப்பட்ட கார்டு, கவர்களைத் தருவது இந்தியைக் கட்டாயப்படுத்துவதைத்தவிர வேறெதுவாக இருக்க முடியும்?

புதிய நாணயங்களில் இந்தி எழுத்துக்கள் மட்டுமே பொறிக்கப்படுகின்றன. அவைகளின் பெயர்கள்கூட "நயா பைசா" "நயே பைசே" என்று "ஆ"கார "ஏ" காரங்களைப் போட்டு, இந்தி புரியாதவர்களுக்கு அகோர சத்தத்தைத் தரும்வகையில் வைக்கப்பட்டுள்ளன. இந்திப் பெயர்களை வைத்ததுமட்டுமல்ல, ஒருமைக்கும் பன்மைக்கும் உள்ள இந்தி இலக்கணத்தையும் கட்டாயப்படுத்தி "நயா பைசா!" "நயே பைசே!" என்று கூப்பிடச் சொல்கிறார்கள்!

இந்திய அரசாங்கத்தினர் வெளியிடும் செய்திப் படங்களில் இந்திப் பெயர்கள் முழுவதும் கையாளப்படுகின்றன. நிகழ்ச்சிகளைக் காட்டும்பொழுது, பின்னணியாக தமிழிலோ, தெலுங்கிலோ விளக்கங்கள் தரப்பட்டபோதிலும், தலைப்புகள் எல்லாம் இந்தியில் இருக்கின்றன. முன்பெல்லாம் எந்த மொழியில் விளக்கந் தரப்படுகின்றதோ, அந்த மொழியில் படத்தின் தலைப்பும் முன்னுரைகளும் இருக்கும். தமிழ்நாட்டில் இருக்கும் சினிமாக் கொட்டகைகளில் போடப்படும் அரசாங்கச் செய்திப் படங்கள் தமிழ்ப் பேச்சுகளுடன் காட்டப்பட்டபோதிலும், ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் முன்னதாகத் தரப்படும் தலைப்புகள் இந்தியில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தியைப் பரப்பிட இது ஒரு கட்டுப்பாடான முயற்சி!

அடுத்தபடியாக வானொலியில், "விவித பாரதி" என்ற புது அமைப்பின்மூலம் இந்தி கட்டாயப்படுத்தப்படுகிறது! தமிழுக்குச் சராசரி நாளொன்றுக்கு ஒரு நிமிட நேரம் தரப்பட்டால், இந்திக்கு ஐந்து மணி நேரம் தரப்படுகிறது! இதிலிருந்து அகில இந்திய வானொலியில் மற்ற மொழிகளை அடக்கி இந்திக்குமட்டும் அதிக இடம் தரப்படுவது தெரியவரும்!

இரயில்வே நிலையங்களில் உள்ள பெயர்ப் பலகைகளிலும் டிக்கட்டுகளிலும் இந்திப் பெயர்கள் போடப்படுகின்றன!

டில்லி ஆட்சிக்கு உட்பட்ட எல்லா அமைப்புகளிலும், இந்திச் சிறுகச் சிறுக நுழைக்கப்பட்டு வருகிறது! இவற்றுக்கெல்லாம் முத்திரை வைப்பதுபோல, கெர் குழுவினர் தந்த அரசாங்க மொழி அறிக்கை வந்துள்ளது. அதன்படி இந்தி மொழியை நேரடியாகக் கட்டாயப்படுத்தக் கூடிய நெருக்கடியான நிலை உண்டாகியிருக்கிறது. இதுவரைப் பதுங்கிப் பதுங்கிவந்த வெறிபிடித்த ஓநாய், நேரிடையாகப் பாயத் தயாராகிறது.

வெறிபிடித்த ஓநாயை விரட்டியடிக்க, இந்தி ஏகாதிபத்தியத்தைத் தென்னாட்டில் வரவிடாமல் தடுத்து நிறுத்திட, அக்டோபர் 13இல் தமிழர்கள் ஒன்றுகூடுகிறார்கள்!

பாய்ந்து வரும் ஓநாய்க் கூட்டத்துக்கு, படையெடுத்து வரும் இந்தி ஏகாதிபத்தியத்துக்குத் தமிழர்கள் தக்கதொரு பதிலைத் தரவேண்டிய நாள் அக்டோபர் 13!

டில்லி ஆட்சிபீடத்தை எச்சரிக்கும் நாள், இந்தி வெறித்தன்மைக்கு அபாய அறிவிப்பைத் தரும் நாள் அக்டோபர் 13!

தென்னாட்டின் அடிமைத்தனத்தைத் தவிர்க்க, தென்னகத்தின் உரிமையைப் பாதுகாக்க, அனைவரும் அக்டோபர் 13இல் "இந்தி எதிர்ப்பு" ஊர்வலங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் கலந்துகொள்க! ○

வினா: இந்தி இந்தியாவின் தேசீய மொழி என்று சொல்லப்படுகிறதே! அது சரியா?

விளக்கம்: இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு தேசீய மொழிகளில் இந்தியும் ஒரு தேசிய மொழியாகுமே யல்லாமல், இந்தியே இந்தியத் துணைக் கண்டத்தின் முழு தேசிய மொழி ஆகாது.

இந்தியாவின் உண்மை நிலையைப் பற்றி அறியாத வெளி நாட்டினரும், இந்தியாவிலேயே உள்ள ஏதும் அறியாத பெரும்பான்மையான பாமரமக்களும் நம்பும் வகையில், இந்தியா ஒரே இன மக்கள் வாழுகிற நாடு போலவும், அதற்கு இந்தி மொழி ஒன்றே தேசிய மொழியாக இருந்து வருவது போலவும் வடநாட்டு இந்தி மொழி வெறியர்கள் பல்லாண்டுகாலமாகப் பொய்ப் பிரச்சாரம் செய்துகொண்டுவருகின்றனர். வடநாட்டுக் காங்கிரசினர்க்கு அடிபிடிகளாகவும், அடிமைகளாகவும் ஆயின தென்னாட்டுக் காங்கிரசுக்காரர்களிலே பலரும் ஆராய்ச்சிக்கு இடமளிக்காமல், சிந்திக்கின்ற பண்பை அறவே இழந்து, "சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை" என்ற மொழிக்கு இணங்க, வடவர் சொல்லுவதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒருவனுக்கு எப்படி ஒரே தாய்தான் இருக்க முடியுமோ, அப்படியே ஒருவனுக்கு ஒரே தேசிய மொழிதான் இருக்க முடியும். ஒருவனுக்குப் பெற்றெடுத்த தாய்மார்கள் என்று எப்படி இரண்டு மூன்று பேர் கள் இருக்க மாட்டார்களோ, அப்படியே ஒருவனுக்கு இரண்டு மூன்று தேசிய மொழிகள் இருக்க முடியா. எடுத்துக் காட்டாகத் தமிழனை எடுத்துக் கொண்டால் தமிழனுக்குத் தாய் மொழியும், வட்டார மொழியும், தேசிய மொழியும் தமிழ்தான் ஆகுமே ஒழிய, இந்திமொழி தமிழனுக்கு எள்ளளவும் தேசிய மொழி ஆகாது. சீன மொழியும், சப்பான் மொழியும், அரேபிய மொழியும், ஆங்கில மொழியும் பிரெஞ்சு மொழியும், எஸ்கிமோ மொழியும், மலேயா மொழியும், சிங்கள மொழியும், சிரியா மொழியும் எப்படித் தமிழனின் தேசிய மொழிகள் ஆகாவோ அப்படியே தான் இந்தி மொழியும் தமிழனின தேசிய மொழி ஆகாது. இந்த வாதம் இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிராத வங்காளிகள், மராட்டியர்கள், குசராத்திகள், கன்னடியர், மலையாளிகள், தெலுங்கர் போன்ற பல்வேறு மொழிப் பிரிவினர்க்கும் பொருந்தும்.

இந்தியத் துணைக் கண்டம் ஒரே ஆட்சியின் கீழ் வந்து விட்டது என்ற காரணத்தாலும், அதிகார மனையில் ஆதிக்கம் செலுத்தும் வன்மை இந்தி மொழியினர்க்குக் கிடைத்து விட்டது என்ற காரணத்தாலும், அந்த ஆதிக்கத்தின் துணைகொண்டு இந்தியை இந்தியப் பேரரசின் அரசியல் மொழியாக இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் கொண்டு வந்து விட்ட காரணத்தாலுமே, இந்தியை இந்தியத் துணைக் கண்டத்தின் தேசீய மொழியாக ஆக்கிவிட முடியுமா? இந்திதான் சட்டத்தின் மூலம் ஆகிவிட முடியுமா? எடுத்துக் காட்டாகச் சீனர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து இந்திய ஆட்சியைக் கைப்பற்றி அதிகாரமும் ஆதிக்கமும் செலுத்திச் சீன மொழியை இந்தியாவின் அரசியல் மொழியாகப் புகுத்தி (எப்படி மொகலாயர்கள் உருது மொழியையும், போர்த்துகீசியர்கள் போர்த்துகீசிய மொழியையும், பிரெஞ்சுக் காரர்கள் பிரெஞ்சு மொழியையும், ஆங்கிலேயர்கள் ஆங்கில மொழியையும் ஆட்சி மொழிகளாகப் புகுத்தினார்களோ, அப்படியேபுகுத்தி) சீன மொழிதான் இந்தியா முழுமைக்கும் தேசீய மொழியாக இருக்கவேண்டும் என்று வற்புறுத்தினால், அது எவ்வளவு பைத்தியக்காரத்தனமான செயல் என்று கருதுவோமோ, அவ்வளவு பைத்தியக்காரத் தனமான செயல் இந்திதான் தென்னாட்டிற்கும், வங்காளம் மராட்டியம் போன்ற பிற பகுதிகளுக்கும் தேசீய மொழியாகும் என்று வற்புறுத்திச் சொல்வதும்.

மக்களை இனம் இனமாகப் பிரித்துக் காட்டக் கூடிய வகையில் அமைந்து, ஒரு இனத்துக்குரிய வரலாறு, மொழி, நாகரிகம், பண்பாடு போன்ற சூழ்நிலைகளைப் பயன் படுத்திக் கொண்டு, வெளிக்கூறுால், திட்டமிடாமல் தாமே ஒரு மித்து வளர்ந்து ஓருருவாகக் காட்சியளிப்பதைத்தான் தேசீயம் என்கிறோம். எனவே தேசீயம் என்பது தானே வளருகின்ற ஒன்றே தவிர, சிலர் திட்டமிட்டுக் குறிப்பிட்ட சில நாட்களுக்குள் உற்பத்தியாக்கி விடக் கூடிய ஒன்றல்ல. உடம்பு வளர்கிறது என்றால் உட்கொள்ளும் உணவைப் பயன் படுத்திக்கொண்டு மெல்ல மெல்ல வளர்கிறது என்று தான் பொருள் படுமேயல்லாமல், ஆட்டின் தசையையும் மாட்டின் தசையையும் சேர்த்துக் கட்டிக்கொண்டு பருத்து வளர்கிறது என்று பொருள் படாது. அதுபோல இந்திதானாக இந்தியாவின் தேசீய மொழி ஆகவில்லை; சப்பைக் கட்டுகள் பல கட்டப்பட்டுத் தேசீய மொழி ஆக்கப்படுகிறது. சேர்த்துக் கட்டப்படும் உயிரற்ற-உணர்ச்சியற்ற தசைகளும், சப்பைக் கட்டுகளும் என்றேனும் ஒரு நாள் போல பொலவென்று உதிர்ந்து விழுமேயல்லாமல், என்றும் நிலைத்து நிற்கவே செய்யா.

இந்தியப் பேரரசினரும், இந்திமொழி வெறியர்களும் இந்தியத் துணைக்கண்டத்திற்கு ஒரே தேசீய மொழியை உற்பத்தியாக்கி விடலாம் என்று கருதிக்கொண்டு ஏதேதோ செய்ய முற்பட்டுள்ளனர். இருக்கும் பல்வேறு தேசீய மொழிகளை அழித்து விட்டால் தான் இந்தியை தேசீய மொழியாக நிலைநாட்டமுடியும் என்று எண்ணி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அந்தந்த வட்டாரத்தில் அந்தந்த வட்டார மொழி ஆட்சிசெய்ய வேண்டிய இடங்களில் இந்தி மொழியை வலுவிக்கத் திணித்து, அது ஆட்சி புரிய விட்டிருக்கின்றனர். புகை வண்டி நிலையங்களில், அஞ்சல் தலைகளில், அஞ்சல் மடல்களில், உறைகளில், வானொலியில், போர்வீரர் துறையில், அரசாங்க அலுவலகங்களில், திரைப்படங்களில், இசையரங்குகளில், கடிதப் போக்குவரத்துக்களில், உடன்படிக்கைகள் எழுதுவதில், புதிய பெயர்கள் இடும்வகைகளில் முழுக்க முழுக்க இந்தியைப் புகுத்தி விட்டனர். இந்தியாவின் ஒரே தேசீய மொழி இந்தி மொழி என்ற போலி எண்ணத்தை வெளிநாட்டினரும் உள் நாட்டிலுள்ள அறிவீனரும் நம்ப வேண்டி மேற் கண்ட ஏதேச் சாதிகாரச் செயல்களில் இந்தியப் பேரரசினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட நிலப்பகுதிக்குத் தான் அது தேசீய மொழியாகுமே யன்றி, இந்தியா முழுமைக்கும் அது தேசீய மொழி ஆகாது. இந்தி இந்தியா முழுமைக்கும் தேசீய மொழியாக இருந்ததில்லை; இப்பொழுது இருக்கவும் இல்லை; இனி இருக்கப்போவது மில்லை!

வினா: இந்தி இந்தியாவில் மிகுவான மக்களால் பேசப்படுகிற மொழியா?

விளக்கம்: இந்தியை இந்தியாவின் பொது மொழியாகவும், அரசியல் மொழியாகவும், தேசீய மொழியாகவும், ஆக்கி விட வேண்டும் என்று துடியாய்த் துடிப்பவர்களெல்லாம், இந்தி பெரும்பாலோரால் பேசப்படுகிற மொழி என்ற ஒரு சப்பைக் காரணத்தையே முதற் காரணமாகவும், முடிவான காரணமாகவும், முழுக் காரணமாகவும் காட்டி வருகின்றனர். அவர்களது கூற்று எவ்வளவு அர்த்தமற்றதும், ஆதாரமற்றதுமான கூற்றாகும் என்பதை உண்மை நிலையை ஆராய்ந்தறிவோர் நன்கு உணரலாம்.

இந்தியத் துணைக்கண்டத்து மக்களனைவரையும் பொதுவாக வைத்துக்கொண்டு கணக்கிட்டால், இந்தி மொழி பேசுவோர் சிறு பான்மையரே யன்றி, பெரும்பான்மையோர் அல்லர். இந்தியப் பேரரசினரால் நியமிக்கப்பட்ட மொழிக் குழுவினர் தயாரித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி இந்தி-உருது-இந்துஸ்தானி-பஞ்சாபி ஆகிய நான்கு மொழிகளைத் தனித்தனித் தாய் மொழியாகக் கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 14,98,45,331 ஆகும்; மற்ற மொழிகளைத் தனித்தனித் தாய் மொழியாகக் கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 20,69,36,084. சற்றுத் தாழ 15 கோடிமக்கள் இந்தி உள்ளிட்ட நான்கு மொழிகளைப் பேசுகின்றனர்; நூற்றுக்குக் கணக்குப் போட்டுப் பார்த்தால் 42 மக்கள் இந்தி உள்ளிட்ட நான்கு மொழிகளையும், 58 மக்கள் இந்தியல்லாத மொழிகளையும் பேசுகின்றனர். அரசியலார் கொடுக்கின்ற கணக்குப்படி இந்தியோடு மேலும் மூன்று மொழிகளைச் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தாலும் அவற்றைப் பேசுவார் சிறுபான்மையோர்தான் ஆகின்றனர். உருது-இந்துஸ்தானி-பஞ்சாபி ஆகிய மூன்று மொழிகளைப் பேசுவோரைத் தள்ளி விட்டு இந்திமொழி பேசுவோரை மட்டும் கணக்கிட்டுப் பார்த்தால், அவர்கள் இன்னமும் சிறுபான்மையோர் தான் ஆவார்களே யல்லாமல், பெரும்பான்மையோர் ஆக மாட்டார்களே!

மற்ற மொழிகளோடு இந்தியைத் தனித்தனியாக நிறுத்திப் பார்த்து வேண்டுமானால், இந்தி மொழி பேசுவோர் தனித்தனி மொழி பேசுவோரைக் காட்டிலும் சற்று மிகவானவர்கள் என்று சொல்லலாமே ஒழிய, இந்தி மொழி பேசுவோரை ஒரு பக்கத்திலும் மற்றமொழிகள் பேசுவோர்களையெல்லாம் மற்றொரு பக்கத்திலும் நிறுத்திப் பார்த்தால் இந்தி மொழி பேசுவோர் சிறுபான்மையோராகத் தான்

(12-ம் பக்கம் பார்க்க)

பணம் தேடும் வெளவால்கள்

—(0)—

நான்கு திக்கிலும் டில்லி மந்திரிகளின் பாய்ச்சல்!

—(0)—

★

பணம் கேட்பதிலும் பல வ்கை இருக்கிறது. கௌரவம், மரியாதை, சிநேகம், இவைகளை விட்டுக் கொடுத்தும் விட்டுக் கொடுக்காமலும், பணம் கேட்கிறவர்கள் இருக்கிறார்கள்.

"என்ன இவ்வளவு தூரம்?"

"ஒன்றுமில்லை. பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்"

"பார்த்து நாளாயிற்று ரொம்பவேலை போலிருக்கிறது!"

"வீடுகட்ட ஆரம்பித்ததிலிருந்து ஓய்வு ஒழிவதில்லை!"

"ஆமாம், புதிய மனையில் வீடுகட்டுவதாகச் சொன்னார்கள்!"

"வீட்டைக் கட்ட ஆரம்பித்ததும்தான் அதிலுள்ள சங்கடம் தெரிகிறது"

வந்தவர் கடன் கேட்க ஆரம்பிக்கிறார் என்பது தெரிகிறது. இருந்தாலும் கடன் கொடுக்கப் போகிறவர் வேறு கேள்விகளைப் போடுகிறார்.

"கொஞ்சம் பெரிய வீடு போலிருக்கிறது?"

ஏன் அவ்வளவு பெரியவீட்டைக் கட்டத் திட்டம் போட்டுக் கொண்டாய், உன்னுடைய சக்திக்கு முடிந்த அளவுக்கல்லவா போட்டிருக்கவேண்டும்? என்பதை இலேசாகக் குத்திக் காட்டுகிறார்.

"பெரிய வீடுதான். அந்த அளவுக்கு இருந்தால் தான் எங்களுக்குச் சரியாயிருக்கும்? இரண்டு அடுக்கு மாடிதான் பார்வைக்கும் நன்றாயிருக்கும்!"

"உனக்கென்னப்பா! நீ நினைத்தால், நான்கு மாடிக் கட்டடம் கூடப் போடலாம்"

கேலியா இண்டலா என்று வந்தவருக்குப் புரியவில்லை. சிறிது யோசித்து மீண்டும் மெதுவாகத் துவங்குகிறார். "எப்படியோ ஆரம்பித்து விட்டேன். இப்பொழுது கட்டடம் நிலைகால் அளவில் நின்று விட்டது. உன் உதவியிருந்தால் அதை முடித்துவிடலாம். உனக்கே தெரியும், நான் இதுவரை யாரிடமும் போய் கை நீட்டி கடன் கேட்டதில்லை. நீ நமக்கு மிகவும் வேண்டியவனாயிற்றே, என்று வந்தேன்"

மிகக் கௌரவமான நிலையில் இருப்பவர்கள்-அல்லது தான் கௌரவமான நிலையில் இருப்பதாக மற்றவர்கள் நினைத்துக் கொள்ளட்டும் என்று பாவனை செய்பவர்கள் மிக நாசூக்காகக் கடன் கேட்பார்கள்.

இன்னும் சிலர் நண்பனென்ற முறையில் மிக அவசரமாக வருவார்கள்.

"எங்கு, இவ்வளவு வேகமாய்?"

"எல்லாம் உன்னைத் தேடித்தான்!" என்று அலுப்புடன் அவன சொல்வான்.

"என்ன வேண்டும்?"

"உன்னைத் தேடி எதற்கு வரப்போகிறேன். கடன்வேண் வேண்டும். ஒரு பத்து ரூபாய் சீக்கிரமாகத்தா நான் போக வேண்டும்"

அவன் வருவதறிந்து தயாராக நாம் இல்லாதது ஒரு குற்றம் போல அவன் பேசுவான்.

சிலர் நம்மிடம் வருவார்கள். "என்ன" என்று நிமிர்ந்து பார்த்தால், பேசமாட்டார்கள். ஒரு துண்டு காகிதத்தை நமக்கு எதிரில் போடுவார்கள். அதை எடுத்துப் பார்த்தால், "எனக்கு மிக அவசரமாக ஐந்து ரூபாய் பணம் வேண்டிருக்கிறது இல்லையென்று சொல்லாமல் கை மாற்றாகக் கொடுத்துதவவும்" என்றிருக்கும். கைமாற்றாக அந்த ஐந்து ரூபாயைக் கொடுத்தால், அவ்வளவு தான் பணம் கை மாறிப் போனது போனதுதான்! பிறகு கடன் கொடுத்தவன் அவனிடம் போய் நின்று "தயவுசெய்து கடனைத் திருப்பித்தந்து உதவ வேண்டுகிறேன்!" என்று சீட்டு எழுதிவைக்கவேண்டியதுதான்!

நாம் வேகமாக வீதியில் போய்க்கொண்டிருக்கும் பொழுது, யாராவது ஒருவர் கூப்பிடுவார்.

"மிஸ்டர். மிஸ்டர்!"

யாரோ தெருப்பெயர், வீட்டு இலக்கம் கேட்கிறார்கள் என்று அருகில் சென்றால், "கான் யூ. பிளீஸ் கிவ் மீ போர் அணாஸ்?" என்று மிக அமைதியாகக் கேட்பார். அதாவது "தயவு செய்து எனக்கு நாலணா தருவீர்களா?" என்று அப்படிப் பணம் கேட்பார். நன்றாகக் கோட், பாண்ட் போட்டிருக்கிற அவரைப் பார்த்தால், முதலில் பணம் கேட்பவராகத் தோன்றாது. பிச்சை கேட்பதிலும் கௌரவமான பிச்சை!

பிச்சை கேட்பவர்களெல்லாம் சத்தம் போட்டு, இரக்கமான குரலில் கேட்பதில்லை. சிலர் பேசாமல், மௌனசாமிகளாக வந்து நிற்பார்கள். நாமாகப் பார்த்து அவர் வந்து நிற்கும் காரணத்தை அறிந்து, காசு கொடுத்து அனுப்பவேண்டும். சிலர் தங்களுடைய நிலையைப்பற்றி கீழே தரையில் எழுதி வைத்துவிட்டு, ஒரு துண்டை விரித்துப் போட்டு உட்கார்ந்துவிடுவார்கள். பரிதாபப்படுபவர்கள் அவர்களாகப் பார்த்து காசு போட்டுவிட்டுச் செல்லவேண்டும். அதைத் தவிர, கைநீட்டிக் கேட்பதோ, வாய் அசைத்து சொல்வதோ கிடையாது.

இந்தியா கடன் கேட்க ஆரம்பித்தபொழுதுகூட, முதலில் யாரையும் பார்த்து ஏதும் கேட்கவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எழுதியபொழுது, "வெளிநாட்டு உதவி 800 கோடிரூபாய் வேண்டும்" என்றுமட்டும் எழுதி வைத்துவிட்டு உட்கார்ந்திருந்தார்கள். திட்டத்தைப் பார்த்ததும் வெளிநாட்டார்கள் தாமாகவே வந்து கொடுத்துவிடுவார்கள் என்று நினைத்தார்களோ என்னவோ, தேவையை எழுதிவைத்துவிட்டு, துண்டை விரித்துப் போட்டு, இந்திய அரசாங்கம் உட்கார்ந்திருந்தது. ஓராண்டாகியது, வெளிநாட்டிலிருந்து உதவியோ கடனோ எதுவும் வரவில்லை.

இந்திய அரசாங்கத்தின் பொறுமை கொஞ்சம் தளர்ந்தது, இருந்தாலும் கௌரவத்தை விட்டுக் கொடுக்கவில்லை. "எங்களுக்கு 800 கோடி வெளிநாட்டு உதவி வேண்டும். ஆனால் யாரையும் கைநீட்டி நான் கேட்கப் போவதில்லை. அவர்களாகப் பார்த்து யாராவது எத்தகைய நிபந்தனையுமின்றி கொடுத்தால், நாங்கள் ஏற்றுக்கொள்வோம்!" என்று நிதியமைச்சர் டி.டி.கே. இறுமாப்பாக இருந்தார்.

எழுதிவைத்துப் பேசாமல் உட்கார்ந்து பார்த்தும் கிடைக்கவில்லை, தட்டைக் கையிலெடுக்காமல் சத்தம் போட்டும் பலனில்லை. "இருக்குமிடம் தேடி என் பசிக்கே அன்னம், உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்" எனப் பட்டிணத்தார் போல ஆரம்பத்தில் இருந்தார்கள். ஆனால் பாட்டுக்குப் பதில் வராமல், பசி மட்டும் அதிகமானால் என்ன செய்வது? முதலில் பாடிய பாட்டை மாற்றிக்கொண்டு, "என் பசிக்கு அன்னம் இருக்குமிடம் தேடி, உருக்கமுடன் செல்வேன் நான்" என்று புறப்பட்டுவிட்டார்கள்.

பாதுகாப்பு மந்திரி வி. கே. கிருஷ்ணமேனன் பிரிட்டனுக்குச் சென்றார்.

★

நிதிமந்திரி டி. டி. கிருஷ்[ணமா]சாரி அமெரிக்காவுக்[குச்] சென்றுள்ளார்.

பிரதமமந்திரி பண்டித நே[ரு] ஜப்பான் நாட்டுக்குச் செ[ன்]றுள்ளார்.

எல்லாம், கடன், கட[ன்], கடன்! "ஐந்தாண்டுத் திட்ட[த்]துக்குப் பணம் தாருங்க[ள்] இல்லாவிட்டால் பேராபத்[து] வரப்போகிறது பாருங்கள்" என்று கூறுகிறார்கள்.

பிரிட்டனுக்குப் போய் கட[ன்] கேட்பது, அமெரிக்காவுக்[குப்] போய் கடன் கேட்பது, ஜப்[பா]னுக்குப் போய் கடன் கே[ட்]பது, கனடாவிடம் ஆ[ஸ்]திரேலியாவிடம் மேற்கு ஜெ[ர்]மனியிடம் செக்கோசுலோவே[கி]யாவிடம், யாரார் எதிர்ப்படு[கி]றார்களோ அவர்களிடமெ[ல்]லாம், "ஐயா கொஞ்சம் கட[ன்] அம்மா கொஞ்சம் கடன்" என்று கூவுகிறார்கள்!

பிரிட்டனிடம் கடன் கேட்[க] முதலில் வி. கே. கிருஷ்[ண]மேனன் சென்றார், பிறகு பண்டித நேருவும் சென்றார். பேச்[சு] வார்த்தைகள் நடைபெற்றன. 200 கோடி, 100 கோடி என்[று] பத்திரிக்கைச் செய்திகள் ப[ல] விதமாக எதிர்பார்த்தன. கடை[சி]யாக எதுவும்கிடைக்கவில்லை.

அமெரிக்காவுக்குக் காவ[டி] தூக்கிக்கொண்டு டி. டி. கே. சென்றார். அமெரிக்க குடிய[ர]சுத் தலைவரைக் கண்டு பே[சி]னார், பாங்கர்களைப் பார்த்தா[ர்], முதலாளிகளுடன் விருந்துல[ண்]டார்! இவ்வளவுக்கப்புறம் எ[வ்]வளவு கடன்கிடைக்கும் என்[று] நிச்சயமாகச் சொல்ல முடி[ய]வில்லை. கடன் கேட்கப்போ[ன] நிதிமந்திரியாலேயே சொல்[ல] முடியவில்லையென்றால், வே[று] யாரால் முடியப்போகிறது? அமெரிக்காவிலிருந்து கனடா[]வுக்குப் புறப்படும்பொழுது ப[த்]திரிக்கை நிருபர்கள் கண்[டு] "அமெரிக்காவிலிருந்து எவ்[வ]ளவு கடன் கிடைக்குமென்[று] எதிர்பார்க்கிறீர்கள்?" என்[று] கேட்டதற்கு "இந்தியாவு[க்]குள்ள நெருக்கடியான நிதிநி[லை]யைப்பற்றிச் சொன்னே[ன்] தவிர, இவ்வளவு கடன் வேண்[]டும் என்று குறிப்பிட்டு நானு[ம்] கேட்கவில்லை, இவ்வளவு தர[] தரமுடியும் என்று அவர்களு[ம்] குறிப்பிட்டுச் சொல்லவில்லை" என்று டி. டி. கிருஷ்ணமா[]சாரியார் பதிலளித்துள்ளா[ர்]. ஆகத் திட்டவட்டமாக எவ்[வ]ளவு கடன் கிடைக்குமென்[று] சொல்ல முடியாது.

பத்து நாட்களுக்கு மு[ன்] பண்டிதநேரு ஜப்பானுக்[குப்] புறப்பட்டார். ஐம்பது ஆண்[டு]களாகவே ஜப்பானைப் பார்[க்க] விரும்பியதாகவும் அது இ[...]

(10-ம் பக்கம் பார்க்க).

சிறுகதை

"எக்ஸ்ட்ரா பார்வதி"

"அருவி"

"பட்டம்மாள் இருக்காங் ..ா?"-கரகரப்பான கனத்த ..னியில் வெளியேயிருந்து ..ல் வந்தது. சர்வ சுதந் ..த்துடன், முன் பின் பழகி ..ட்டவர்களின் குரல் போலி ..ந்தது.

..ன்னை அடுத்திருந்த வீட் ..ல் ஒரு 'எக்ஸ்ட்ரா' நடிகை ..ருப்பதும். அவள் பெயர் ..வதி என்பதும் எனக்குத் ..ியும். அப்படியானால் பட் ..மாள் யாராக இருக்கக் ..ும் என்று எண்ணமிட்டுக் ..ாண்டிருந்த என் காதுகளில் ..டும் அந்தக் குரல் கேட் ... அதைத் தொடர்ந்து பக் ..து வீட்டுக் கதவும் திறக்கும் ..தம்...

..ன்ன நடக்கிறது என்று ..ிந்து கொள்ளும் ஆவலில் ..னலின் வழியே பார்வை ..ச் செலுத்தினேன்,

..தரு வாசலில் இரு மனிதர் ..; சற்று தொலைவில் ஒரு ..ண்டியாக்' கார்; அதற்குள் ..ருந்து கிளம்பும் சிகரெட் ..கச் சுருள்கள்; ஆனால், ..த விட்டுக் கொண்டிருக் .. மனித உருவம் தெரிய ..லை! இருளுக்கும் அவர் ..த்திற்கும் அவ்வளவு ஐக்கி ..ிருந்தது! ஆனால் வாசலில் ..ற இருவரும் பார்க்க அழ ..யும் அலங்கார உடையுட ..ம் இருந்தார்கள்.

..ணி அப்பொழுது சரியாகப் ..ந்து. பனி பெய்துகொண்டி ..ந்தது, உடலில் ஊசி இறக்கு ..துபோல் குளிர்க் காற்று வீர் ..ன்று வீசி யடித்துக்கொண் ..ருந்தது.

..உற்று கவனித்தேன், பக் ..ந்து வீட்டுக் கதவைப் பாதி ..கத் திறந்து கொண்டு ..ள்ளேயிருந்து ஒரு தலை எட் .. பார்த்தது. வாசலில் ..ருந்த அந்த நிழல் உருவம், ..மாட்சியம்மாளுடையது. தன் ..ண் பார்வதியை அழைக்க ..ராவது வந்தால், முதலில் ..ப்படித்தான் அவள் எட்டிப் ..ர்ப்பது வழக்கம். அறிமுக ..னவர்களாயிருந்தால். கத ..வத் தாராளமாகத் திறந்து, ..ள்ளே அழைப்பாள். பிறகு ..ண்ணை அழைத்து அவர்க ..ம் பேசவிட்டு, அவர்கள் ..சுவதைக் கதவோரம் நின்று ..ாண்டு உன்னிப்போடு கேட் .. கொண்டிருப்பாள். இடை ..டையே அவளும் பேச்சில் ..ந்து கொள்ளுவாள் சினிமா ..வப் பற்றி அதிகம் அறிந்த ..ல்ல என்றாலும், தன் மக ..ுக்கு நடிக்க ஒரு சந்தர்ப்பம் ..டைக்கவேண்டுமே என்ற ..சையில் எதையாவது உள .. கொட்டுவாள்! பார்வ ..க்கு இது தருமசங்கடமாயி ..க்கும்! சில சமயங்களில் தன் ..ின் அழகைப் பிரமாதமாக ..ுணிக்க ஆரம்பித்து விடு ..ள! கேட்பவர்கள் அதை ..ந்தியாசமாகக் கூட அர்த் .. செய்து கொள்ளும்படி ..ருக்கும்!...ஆனால், அந்த ..னைவு ஏற்படவேண்டும் என்று நினைத்து, அவள் அப்படிப் பேசுவதில்லை. களங்கமற்ற அவள் மனதில், பார்வதிக்கு எப்படியாவது நடிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும், பெரிய ஒரு 'ஸ்டாரா'க வேண்டும்; தம்மைப் பீடித்த வறுமை மறைந்து. வாழ்வு மலரவேண்டும்;— என்ற தணியாத ஆசை குடிகொண்டிருந்தது. அந்த ஆசை இன்னும் பன்மடங்காகப் பார்வதியிடம் நிறைந்திருந்தது.

அந்த ஆசைக்கு ஏற்ற அரும் முயற்சி; அழகிய முகவெட்டு; கச்சிதமான உடலமைப்பு; உள்ளத்தைத் தொடும் உணர்ச்சி மிக்க நடிப்பு;-இவ்வளவும் அவளிடம் இருக்கத்தான் செய்தன. இருந்தும், 'ஸ்டார்' பதவிக்கு உயர்ந்து செல்ல பார்வதியால் முடியவில்லை...

இந்த நினைவுகளில் மூழ்கிக் கொண்டிருந்த என்னை, வெளியே எழுந்த பேச்சுக் குரல் சுய நினைவிற்கு இழுத்து வந்தது.

"நீங்க யாரு?"-காமாட்சியம்மாள் கேட்டாள்.

"நாங்க, 'அரோஹரா' புரொடக்ஷன்ஸ் சொந்தக்காரர்கள். இப்போ ஸ்டூடியோலேருந்து நேரா வாரோம்"

"ஓஹோ, அப்படிங்களா? என்ன விசேஷம்?"

"பட்டம்மாளைப் பார்க்கணும் இருக்குதுங்களா?"

"யார்? பட்டம்மாளா?"

"ஆமாம் 'எக்ஸ்ட்ரா' பட்டம்மாள் தான். அதுக்கு ஒரு அரண்மனை 'செட்டி'லே தோழி 'சான்ஸ்' இருக்கு. இன்னும் பத்து நிமிஷத்திலே, ஷூட்டிங் ஆரம்பிக்கப் போவுது இருந்தா சீக்கிரம் சொல்லி அனுப்புங்க"

அவர்கள் துரிதப் படுத்தினார்கள்! காமாட்சியம்மாள் உள்ளத்தில் ஆசை எண்ணங்கள் நெளிந்தன.

பட்டம்மாள் என்பவளுக்குக் கிடைக்கப்போகிற அந்தத் தோழி வேடம், தன் மகளுக்குக் கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? இந்த ஆவலை அவள் முக உணர்ச்சிகள் பிரதிபலித்துக் காட்டின.

"நீங்க, பட்டம்மாளையா கேக்கிறீங்க? அவ இந்த இடத்தெ விட்டுப் போயி ரொம்ப நாளாகுதே!"

இது ஒரு பெரிய புளுகுதான்! ஆனால் வந்திருப்பவர்களோ அவளுக்கு மேல் தந்திரக்காரர்கள்! தன் மகள் பார்வதியை மனதில் வைத்துக் கொண்டு தான், கற்பனைப் பெயரான பட்டம்மாளைக் கேட்கிறார்கள் என்ற சூழ்ச்சியை அந்தப் பேதை உணரவில்லை...

"ஐயையோ! மோசம் போயிட்டோமே......இப்போ எங்கே போயி, யாரை தேடிக் கண்டு பிடிக்கிறது? ஏம்மா இந்த பக்கம் வேறெ யாராவது 'எக்ஸ்டரா' கிடைப்பாங்களா?"

அவர்களின் சதி எண்ணம், சூழ்ச்சி வலையாக விரிந்தது!...

காமாட்சியம்மாள் முகத்திலே, வெற்றிக்களை தாண்டவமாடியது!

"தூரமா எதுக்குங்க போகணும்...நம்ம பொண்ணு பார்வதி இருக்கிறு...அவளை..."

"அடடெ......இதை முன்னடியே சொல்லியிருக்கப்படாது?

பார்வதியின் தாய்க்கு மகிழ்ச்சி தாங்கவில்லை! கதவைத் திறந்து உள்ளே அழைத்தாள். உள்ளே போய் உட்காரும்வரை அமைதி; பிறகு பேச்சு தொடர்ந்தது.

பக்கத்து அறையாதலால், உள்ளேயிருந்து பேசுவதைக் கேட்பதற்கு ஜன்னல் உதவியாக அமைந்தது.

"என்னம்மா...உங்க பேரு தான் பார்வதியா?"

"ஆமாங்க."

"இதுவரை எத்தனை படங்களிலெ நடிச்சிருக்கீங்க?"

"வேஷமில்லாமெ எத்தனையோ படங்களுக்கும் போயிருக்கிறேன். கும்பல் தேவைன்னு, வந்து கூட்டிகிட்டுப் போவாங்க, ஆனால் ரெண்டொரு 'டைலாக்'கோட, வேஷமும் கிடைச்சு நடிச்சது, இந்த ஆறு வருஷத்திலெ இரண்டு படந்தானுங்க"

"ஐயோ பாவம்! இந்தப் பாழும்படமுதலாளிகள். லக்ஷம் கோடின்னு 'ஸ்டார்களுக்கே' கொட்டியழுவானுக! இப்படி அழகும் திறமையும் உடையவர்களை ஏறெடுத்தும் பார்க்கிறதில்லை. ஆறு வருஷத்துக்கு இரண்டே படந்தானா? சே! அநியாயம்! கேட்கவே வருத்தமாயிருக்கு."

இப்படி அனுதாபப் பேச்சுகளைத் தாயும் மகளும் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போனவைகள் தான் என்றாலும், ஒரு படமுதலாளியே, தன் போன்றவர்களைக் குறைகூறிடக் கேட்டதில்லை! ஆகவே, அந்த வார்த்தைகளை உண்மையென்றே நம்பினார்கள். அத்துடன், 'ப்ரோக்கர்' வந்துபோகும் வீட்டிற்குப் படமுதலாளியே 'எழுந்தருளி'யிருப்பது பெருமையல்லவா!...

"இந்த படத்திலெ மட்டுந்தான் பார்வதிக்கு தோழி வேஷம்னு நினைச்சுக்குங்க. அடுத்தபடியா நாங்க எடுக்கப் போற 'நயவஞ்சகர்' படத்திலெ கண்டிப்பா உங்க மகள்தான் 'ஹீரோயினா' இருக்கப்போராங்க" என்று ஏகத்தாளமாகப் பேசினார்கள் வந்தவர்கள்.

பிறகு விவரிப்பானேன்?... மின்னல் வேகத்தில் பார்வதி உடைஉடுத்தி வெளிவந்தாள்; காற்று வேகத்தில் கார் பறந்து இருளோடு மறைந்துபோனது.

* * *

பார்வதி போய்விட்டாள். ஆனால் என்நினைவுகளின் அலை மோதல் ஓயவில்லை.

ஜன்னல் கம்பிகளைப் பிடித்த வண்ணம, வானவெளியைப் பார்த்துக்கொண்டு நின்றேன். விவரிக்க இயலாத ஏதோ ஒருவித குழபபத்தில் என் மனம் சிக்கிக்கொண்டது.

இருளைப் பார்த்துப் பழகிய என் கண்களுக்கு, இன்று ஏனோ அது பயங்கரமாகக் காட்சி தந்துகொண்டிருந்தது அந்தக் காரிருளையும் ஊடுருவிக்கொண்டுவரும் தாரகையின் ஒளிபோல், பார்வதி என் நினைவு வானில் ஒளி மின்னி எழுந்தாள்.

சிரிக்கும் அவள் செங்கமல முகம்; சாந்தம் குலவும் குளிர்ப் பார்வை; அன்பு பொழியும் இன்மொழி; நாணமும் அடக்கமுமான அந்த எழில்நடை;— எல்லாம் என் மன வானில் மின்னி மிளிர்ந்தன.

இவ்வளவு பண்பும் பொலிவும் இருந்தும் பார்வதி ஒரு 'எக்ஸ்ட்ரா'தானே! — அதாவது, எப்பொழுதோ உதவக்கூடிய, அவ்வளவு அவசியம் இல்லாத ஒரு பொருளாகத் தானே அவள் மதிப்பிடப்படுகிறாள்?...

அவசியமற்ற பொருளைக் குப்பையாக ஒதுக்குவதுபோல் 'எக்ஸ்ட்ரா' பட்டத்தை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொண்டவர்கள் இன்றைய தினம், ஒதுக்கப்பட்டவர்களாக் கப்பட்டிருக்கிறார்கள்...!

ஒளியற்ற அவர்களின் இருள் வாழ்வை எண்ணியபொழுது, வானத்தில் இன்னும் இருள் சூழ்ந்துவிட்டதுபோல் தோன்றியது!

பயங்கர அமைதி நிலவிய அந்த இரவு நேரத்தில், என் வீட்டுப்பக்கமாக ஓங்கி நின்ற ஆலமரத்துப் பறவைகள் படபடவென்று சிறகடித்துக் கொண்டன! எங்கிருந்தோ, ஒரு பெண்ணின் சோகம் நிறைந்த அழுகுரல் காற்றில்மிதந்து வந்தது! வாடைக்காற்றின் சிலுசிலுப்பைத் தாங்கமுடியா

மல் என் உடல் வெடவெடத் தது.

இதைப்போல், குளிர் நடுக் கும் ஒரு இரவில்தான், இங்கே, அறை வாடகைக்கு இருப்ப தைக் கேள்விப்பட்டு வந்தேன், அந்த நிகழ்ச்சியை எண்ணிப் பார்த்தால், தெருவில் போகும் ஒரு 'எக்ஸ்ட்ரா'வைப் பார்த் துக் குத்தலாகவும் கிண்டலாக வும் பேசிக்கொள்ளும் ஈனர்கள் மேல் யாருக்குமே ஆத்திரம் எழாமலிருக்காது.

அன்று இரவு எட்டுமணி யிருக்கும். இந்த வாசல் முன்பு நின்று விசாரித்தேன். பார் வதி அப்பொழுது கதவோர மாக எதையோ படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

"இங்கே ஒரு அறை காலி இருக்கிறதாமே?"—நான் கேட் டேன்.

அவள் சொல்லப்போகும் பதிலுக்குக் காத்து நின்ற என்னை 'ஏமாற்றிவிட்டுத்' தலையை உள்ளே இழுத்துக் கொண்டாள்! மறுகணம், அவள் தாயாரின் தலை வெளியே நீண்டு பார்த்தது!

அன்றுமுதல் நானுந்தான் பார்த்துவருகிறேனே, இதே முறையில்தான் இங்கு வரு கின்ற ஆடவர்களிடம் பார்வதி நடந்துகொள்ளுகிறுள். ரொம் பவும் அவசியம் ஏற்பட்டா லன்றி, அவள் பேசுவதற்கு வெளியே வருவதில்லை. அதை அவள் விரும்புவதில்லையாம். வயிற்றுப் பிழைப்புக்காக நாலு பேரிடம் இப்படிப் பல்லிளித் துப் பேசவேண்டியிருக்கிறதே என்ற கவலை அவளுக்கு அதி கமா இருப்பதாகக் காமாட்சி யம்மாளே என்னிடம் சொல்லி விசனப்படுவதுண்டு.

அப்பொழுது நான் கேட் பேன்: "அப்படியானுல், உங் களுக்குப் பிடிக்காத இந்தத் தொழிலை ஏன் விட்டுவிடக் கூடாது?" என்று.

"என்ன தம்பி செய்வது? என் மகளை யாராவது திரு மணம் செய்துகொண்டு வாழ் க்கை நடத்துவதானுல், இந்த நிமிஷமே தலைமுழுக்குப் போட்டுவிடுவேன்."

"ஏன்? கலியாணத்திற்குப் பணமில்லையா?"

"பணத்தைப் பற்றியல்ல தம்பி; மணம் செய்துகொள் ளவே எல்லோரும் பயப்படுகி ருர்கள்!"

"ஏன் பயப்படவேண்டும்?"

"பார்வதி ஒரு 'எக்ஸ்ட்ரா' என்பதால்..."

"அதனுல் என்ன?"

"அதனுலா...அதனுல்...... அது...அதுவந்து..."

"பரவாயில்லை, தயங்காமல் சொல்லுங்கள்"

"சொல்லவே கூச்சமாயிருக் கிறது தம்பி, எக்ஸ்ட்ரா என் ருல்..."

"என்ருல்?"

"'வேசி' என்ற நினைப்பு இருந்துவருகிறது..."

எனக்கு இதற்குமேல் கேள்வி கேட்கவேண்டும் என்ற மனத் துணிவே நசிந்துவிடும்! தூய் மையும் ஒழுக்கமும் நிறைந்த ஒரு ஏழைப் பெண்ணின் தாயின் முன்பு நிற்கிருேம் என்ற நினைப்பு என்னை அரிக்க ஆரம்பித்துவிடும்.

எத்தனையோ விபசாரக் களி யாட்டங்களைக் 'குடும்பம்' என்ற திரை, மறைத்துவைக்கி றது!

கள்ளக் காதலியுடன் குல வும் கணவன்!—கணவனை ஏய்த்துவிட்டுச் சோரம்போகும் மனைவி!— இவர்களெல்லாம் சமூகத்தின் கண்களுக்கு கண் ணியமுள்ள 'குடும்பஸ்தர்கள்!' ஆனுல் கற்பைக் கண்ணினும் உயர்வாக மதிக்கும் பார்வதிக ளுக்கு வேசிப்பட்டம்!

வேதனையும் விசித்திரமு மான இந்நியதிகளை எண்ணி மனம் புழுங்கிக்கொண்டிருந்த சமயத்தில், சுவற்றுக் கடிகா ரத்தில் ஒலி அலைகள் கிளம் பின. இரவின் பயங்கரத்தை அந்த ஓசை இன்னும் அதிகப் படுத்திக் காட்டியது!

இந்த பயங்கர இரவில் பார் வதி எங்கே போய்க்கொண்டி ருக்கிருளோ என்ற ஒருவித அர்த்தமற்ற கேள்வி எழுந்து என்னை வதைக்க ஆரம்பித் தது!

திடீரென்று கதவு தட்டும் சப்தம்!

கலவரமும் குழப்பமும் தளும் பும் என் மனப் பிரமையின் எதி ரொலிதானே என்ற நினைப் பில் அப்படியே அசைவற்று நின்றுகொண்டேன்.

மீண்டும் பலமான கதவிடிக் கும் சப்தம்!!

நான் நகர்ந்தேன். ஆனுல் கதவைத் திறக்கும் அளவு தைரியம் வரவில்லை!

"தம்பி! தம்பி!" என்ற குரல், விம்மலுக்கிடையே எழுந்தது.

என்னை சற்று தைரியப்படுத் திக்கொண்டுபோய், கதவைத் திறந்தேன்,

"தம்பி! பார்வதியை அனுப் பினுலும் அனுப்பிவிட்டேன்... மனசு ஒண்ணும் நிம்மதியே இல்லை. என்னமோ கலவர மாவே இருக்கு தம்பி" என்று கண்ணீர் வடித்து நின்ருள், காமாட்சியம்மாள்.

"நீங்களும் ஏன் துணைக்குப் போயிருக்கக்கூடாது?"

"எல்லாம் நம்பிக்கைதானே தம்பி. பெரிய படமுதலாளி கள்தானேன்னு நம்பி அனுப்பி வச்சேன்" என்று சொல்லி விம்மினுள்.

அவள் விம்மலை ஆமோதிப் பதுபோல் எங்கிருந்தோ ஒரு ஜாமச் சேவல் சிறகடித்துக் கொண்டு கூவியது...

பொழுது புலர்ந்தால் என்ன பயங்கரச் செய்தியை என் செவிகள் கேட்கப்போகின்ற னவோ என்ற கலவரத்தி லேயே அந்த இரவைக் கழிக்க வேண்டியிருந்தது!

* * *

மறுநாள்......

எந்த 'ஷூட்டிங்' காலுைம் விடியற்காலையிலேயே வீட்டில் வந்து அடைந்துகொள்ளும் பார்வதி, பொழுது விடிந்து வெகு நேரமாகியும் வரவில்லை!

காமாட்சியம்மாள் என்னை அழைத்து, "இவ்வளவு நேர மாகியும் அவள் வரவில்லையே தம்பி, கொஞ்சம் போயி பார்த் துட்டு வர்றியா?" என்ருள்.

'சரி'யென்று சொல்லி, முக வரியுடன் புறப்பட்டேன்.

அன்று பகலெல்லாம் சுற் றித் திரிந்தேன். மாலையும் வந்துபோனது. ஆனுல், 'அரோஹரா' என்று ஒரு கம்பனியே இல்லை என்ற உண்மை, ஒருநாள் அலைச்ச லுக்குப் பிறகுதான் தெரியவந் தது!

மறு நாள் முழுமையும், கம் பெனி கம்பெனியாக, ஸ்டுடி யோ ஸ்டுடியோவாகச் சுற்றி, வலைபோட்டுப் பார்த்துவிட் டேன்.

மூன்ரும் நாள். நான் புறப் பட ஆயத்தமாகிக்கொண்டி ருந்த சமயத்தில், என் நெருங் கிய நண்பன் பழனி வந்துசேர்ந் தான். அவன் ஒரு சி. ஐ. டி.

வந்ததும் வராததுமாகப் பார்வதி வீட்டைப்பற்றி விசா ரிக்க ஆரம்பித்தான்; எனக்கு அதிசயமாயிருந்தது.

"என்னப்பா பழனி! நண்ப னைப் பார்க்க வந்தாயா? அல் லது உத்தியோக தோரணையில் உளவறிய வந்திருக்கிருயா?" என்றேன் கிண்டலாக.

"ஹும்! என்ன உளவறிந்து என்னப் பிரயோஜனம்?" என்று சப்பிட்டது மாதிரி அவன் பதில் சொன்னுன. சொல்லிவிட்டு, இரு தினங்க ளுக்கு முன்வந்த ஒரு தினசரி யில் ஒரு பகுதியைக் காட்டி, 'இதைப் படி என்ருன்.

"பார்வதி என்ற எக்ஸ்ட்ரா நடிகை ஒருத்தி, உயிர் போகும் தருவாயில் சேத்துப்பட்டுக் காணுற்றங்கரை ஓரமுள்ள ஒரு புதரில் கிடத்திவைக்கப்பட் டிருந்தாள். தகவல் அறிந்த தும் போலீஸார் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று அவளை சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு அப் புறப்படுத்தினர். புலன் விசா ரணை நடந்துவருகிறது."

படித்ததும் என் உள்ளத் தில் பூகம்பமே எழுந்துவிட் டதுபோல் ஒரு தாங்கமுடியாத அதிர்ச்சி!...ஸ்தம்பித்து நின் றேன்!

அவன், சட்டென்று, இன்று காலைவந்த பத்திரிகையைப் பிரித்து 'இதையும் படித்துப் பார்' என்று சொன்னுன்.

"இரண்டு நாளைக்கு முன்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்ட பார்வதி எனற யுவதி, இன்று காலை உயிர் நீத்தாள், உடலைப் பரிசோதித்தடாக்டர், அவள் தற்கொலை செய்து கொண்டதாகத் தன் ரிப்போர் டில் குறிப்பிட்டிருக்கிருர்"

என் தலை கிறுகிறுப்பதுபோ லிருந்தது! பழனியைப் பார்த்து மிரளமிரள விழித் தேன். துக்கம் தொண்டை யடைக்க, என்ன நடந்தது என்று கேட்பதற்கும் நா எழா மல் அப்படியே சிலையாகி நின் றேன்.

இரண்டு தினங்களாக அழு தழுது, உணவும் உட்கொள் ளாமல் துவண்டுகிடந்த காமா ட்சியம்மாளின் அழுகுரல் இப் பொழுது ஈனஸ்வரத்தில் ஒலி த்துக்கொண்டிருந்தது.

பார்வதிக்கு நேர்ந்த கதியை அவளிடம் சொன்னபொழுது அவள் அலறிய அலறல்!... துடித்த துடிப்பு!!...மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்ட அடிகள்!!!—ஐயோ, அதை எப்படி நான் வருணிப் பேன்?

கடைசியாக, பெரும் முயற்சி எடுத்துக்கொண்டதில் பிணம் வீடுவந்து சேர்ந்தது.

அன்று உயிரோடு சென்ற பார்வதி, இன்று பிணமாகி

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	... ரூ.	15·00
ஓராண்டு	... ரூ.	8·00
ஆறுமாதம்	... ரூ.	4·00
தனி இதழ்	...	16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	... ரூ.	18·75
ஓராண்டு	... ரூ.	10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...	20 காசு

(இசைப்பாட்டு)

இந்தி எங்கே?

(தமிழ்க்கனல்)

★

இந்திவெறிப் பித்தருக்கு அஞ்சோம்—வெறும்
மந்தைகளாய் செந்தமிழர் துஞ்சோம்—இதோ
வாளெடுத்தோம் : கால் எடுத்தோம் :
தூள்படுத்தக் கூடிடுவோம்
இங்கே — இந்தி — எங்கே? (இந்தி)

பட்டிமறிக் குட்டியெனக் கொண்டார்—'இந்திக்
குட்டிநரி பட்டங்கொள்க' என்றார்—துஞ்சும்
வெந்திறல் புலிஇடறும்
அந்தகராய்ப் போனவரைக்
கிழிப்போம்! — திமிர் — அழிப்போம்!! (இந்தி)

செந்தமிழைச் சூழுகிறார் சாய்க்க—அவர்
இந்தி அர சாள் மொழியாய் வாய்க்க—அட
மானமெலாம் விற்றனமோ?
ஈனமெலாம் உற்றிட நாம்
புழுவோ — பன்றிக் — குழுவோ? (இந்தி)

பைந்தமிழா முன்னணியில் நில்லு—உந்தன்
சொந்த மகன் பின்னணியில் தள்ளு!—நாம்
தட்டுமுர சோசையிலே
நெட்டுக்கிடை யாய்விழுந்து
போக — இந்தி — சாக!! (இந்தி)

மயான யாத்திரை செல்லத் தயாராகிக் கொண்டிருந்தாள்...

அந்தி சாய்ந்த நேரம் நாங்கள் ஐந்தாறு பேராகப் பார்வதியுடன் புறப்பட்டோம். அதே நேரத்தில், எங்களுக்கு எதிராக ஒரு கூட்டம் வந்து கொண்டிருந்தது.

பழனி அதைச் சுட்டிக்காட்டி "எனக்காகத்தானப்பா அந்தக் கூட்டம் என்று சொல்லிச் சிரித்தான்

எதிரே பழனியாண்டவர் ரதத்தில் ஜெகஜ்ஜோதியாய் காட்சியளித்துக் கொண்டிருந்தார், தகதகக்கும் வெள்ளி வேல்; பளபளக்கும் பள்ளி மயில்; ஒளி சிந்தும் திருமுடி இவை சகிதம் மலர் ரதமேறி வந்து கொண்டிருந்தார் ஆண்டவர்.

நண்பன் பழனி என்னை லேசாகப் பிடித்துக் கிள்ளி, "அந்த ஆள் வருகிறானே அவனைக் கவனி" என்று ஜாடை காட்டினன்.

பார்த்தேன்.

நாற்பத்தைந்து வயதிருக்கும் தளதள என்று தொங்கு சதை உடலாட, நடக்க முடியாமல் நடந்து கொண்டிருந்தார்! பம்பளிமாஸ் முகம்! பச்சைக் கடுக்கன் டால் வீசும் காது! குடை மிளகாய் மூக்கு! ஆந்தை விழிகள்! வண்ணான் சால் வயிறு! கடைந் தெடுத்த கட்டில் கால்போல் கை-கால்கள்! கையில் பட்டைக் காப்பு! விரல் விடாமல் மோதிரம்! கருமுகில் மேனி! அதில் நிறைந்து வழியும் சந்தனக் குழம்பு! நெற்றியில் கால் காசு அளவில் குங்குமப்பொட்டு! பட்டைச் சரிகை வேட்டி' அந்த வேட்டி முடமுடக்க, தோளில் வெள்ளிக் காவடி மினு மினுக்க, யானை நடை நடந்து வந்தார் அவர்.

'இன்று, விசேஷ ஆராதனையாம்-செட்டியாருடையது!

'எட்டாயிரம் செலவாம்! அவர் சொந்தப் பிரார்த்தனையாம்! வெள்ளி வேலும் தங்க முலாம் மயிலும அவர் அன்பளிப்பாம்!

'பாலாபிஷேகம்-இன்று கன ஜோராயிருக்கப் போகிறது!'

'கானக் குயில் மீன லோசினியின் அமிர்த கானம் வர்ஷிக்கப்போகிறது'

இப்படி, பக்தர்கள் பெருமை பட்டுக் கொண்டார்கள். அந்த திருக்கூட்டத்தை இப்பொழுது நாங்கள் கடந்து கொண்டிருந்தோம்.

ரதத்திற்குப் பின்னால். கூட்டம் சிறிது சிறிதாகக் குறைந்து கடைசியில் ஒரு கார் மட்டும் மெல்ல நகர்ந்து சென்றது.

பழனி என்னை மறுபடியும் கிள்ளிவிட்டுக் 'கவனி' என்றான்.

என்ன ஆச்சரியம்...! அன்று இரவு, பார்வதியை அழைத்துப்போக வந்த அதே 'பாண்டியாக்' கார்!... அதைவிட அதிசயப்படக் கூடியது, அதனுள் பக்த கோலத்திலிருந்த 'அந்த' இரண்டு மனிதர்கள்...!

காரின் உள்ளிருந்து கலகல என்று சிரிப்பொலி எழுந்தது. ஒரு கட்டிளங் குமரி அவர்களுக்கு மத்தியில் ஒய்யாரமாக அமர்ந்திருந்தாள்!

மூச்சு விடமுடியாமல் திக்கு முக்காடுவது போல ஆகி விட்டது எனக்கு!

"நன்றாக கவனித்தயா? இது தானப்பா உலகம்!" என்று சொல்லிவிட்டு, "பார்வதியும் அன்று இப்படிதான் போயிருப்பாள்என்றான் பழனி.

"இன்று..." என்று தொடங்கிய என்னை இடைமறித்து "அவள் பிணமாகி விட்டாள்! ஏன் தெரியுமா?" என்று கேட்டான் பழனி.

"ஏன்?"

"மனிதனுடைய மிருக இச்சையால்!"

"அப்படியென்றால்?..."

"அப்படியென்றால் ... புரியவில்லையா உனக்கு? அதோ, போகிறாரே தேருக்கு முன்னால்-அந்த தொங்கு சதை மனிதர்; அவரைப் பார், புரியும்!"

"அவர்..."

"ஆம்; அவர் தான் அன்று பார்வதியை அழைத்துப்போக இந்த இரு மனிதருடன் வந்தவர்!......

எனக்கு அன்று இரவு காருக்குள்ளிருந்து புகைந்து வந்த சிகிரெட் புகைச் சுருள்களும், உருவம் தெரிந்து கொள்ளாத அந்த கார் வண்ண மனிதரும் பளிச் சென்று நினைவிற்கு வந்தன!

"அப்படியானல் வெளியே இருக்கிறாரே?" என்று அதிசயித்துக் கேட்டேன்!

அதற்குப் பழனி சொன்ன பதில் என்னை திகைக்கவைத்துவிட்டது!

"இந்த மாதிரி மனிதர்களைப் பிடித்தால், பிடிப்பவன் தான் ஜெயிலுக்குள் போய்விடுவான்!" என்றான்!

"அது எப்படி?"

"பணமப்பா! பணம்! 'பணம் பத்து வகை செய்யும்' என்ற பழமொழிதான் உனக்குத் தெரியுமே! அந்த பாழும் பணந்தான் பார்வதியின் வாழ்வோடு விளையாடி விட்டது! முதல் நாள் 'கொலை' என்று வந்த செய்தியை மூன்றும் நாள் 'தற்கொலை'யாக மாற்றி விட்டது! நான் புலன் விசா ணைக்குச் சென்ற சமயம், பா வதியை முதலில் பரிசோதித் டாக்டர் என்ன சொன்ன தெரியுமா?"

"என்ன சொன்னார்?"

"யாரோ இரண்டு மூன்ற பேராகச் சேர்ந்து அவளை கெடுத்து நாசமாக்கியிருக்க வேண்டும். ஏற்கனவே அவள் பலஹீனமா யிருந்திருக்கிறாள் இனி அவள் பிழைப்பது என் னமோ கஷ்டந்தான" என்றார்

பார்வதி இளைத்திருந்தது என்னமோ உண்மைதான் ஒரு மாதத்தில் இருபது அல்லது இருபத்தைந்து நாட்கள் தான் அவளால் சாப்பிட முடிந்தது படக் கம்பெனிகளும். ப்ரோ கர்களும் உடனே அவளுக்கு சேரவேண்டிய பணத்தை தருவது வழக்கமில்லை! பதி னைந்து இருபது நாட்கள்-ஏன் ஒரு மாதமும் அதற்கு மேலும் கூட ஆகிவிடும் பணம் கைக்கு வருவதற்கு! அதுவும் முழுசா வராது! இந்த நிலையில் அதையே வயிற்றுப் பிழைப் பாக நம்பியிருப்பவர்களின் க என்ன ஆவது?...

ஒன்று, உடலைவிற்று வயி வளர்க்கவேண்டும்; அல்ல வறுமையில் வாடி மானத்தை காக்கவேண்டும்; இதில் பா வதி இரண்டாவது வகையை சேர்ந்தவள்...

இதையெல்லாம் நினைத் படியே வெகுதூரம் நாங்கள் வந்துவிட்டோம். மயான பூமி கண்ணுக்கெட்டிய தூரத்தில் காட்சியளித்துக் கொண்டிரு தது,

ஒருமுறை திரும்பிப்பார் தேன். புள்ளிமயில் வாகன ரின் 'புனித' சீடர் கோயில் பிராகாரத்தை நெருங்கி கொண்டிருந்தார்.

சவத்திற்கு முன்னால் பூம்பூ என்று சங்கு ஒலி முழங்கியது அங்கே......நாதஸ்வரத்தின் இனிய நாதம் பொங்கி வழிந் கொண்டிருந்தது.

இங்கே, காமாட்சியம்மாளின் 'ஐயோ! பார்வதி!' என் அழுகுரல், அங்கே, அந்த 'பெரியவரின்' 'முருகா முருகா!' என்ற பக்திப்பிரார் தனை. இரண்டும் காற்றலை ளில் கலந்து மிதந்தன. பா வதியின் உடலைப்பற்றி மூண் டெழுந்த புகை மூட்டமும் அ துடன்கலந்து வானமண்டல திற்கு உயர்ந்துகொண்டிரு தது. அவற்றோடு என் கண் ணீரும் பெருமூச்சும் சேர்ந் கொண்டன...

இலக்கியம்

வருபவர் வறிதே போகமாட்டார்!

உப்பங்கழிகள். அவற்றை அடுத்துப் பரந்த கொல்லைகள். அந்தக் கொல்லைகளைச் சுற்றிலும் நீண்டு உயர்ந்த கண்டல் மரங்கள் வேலிபோல் அமைந்திருக்கின்றன. கொல்லைகளின் இடையிடையே சிறு சிறு குடிசைகள் காணப்படுகின்றன. அவைகள் முள்ளிச் செடிகளால் வேய்ந்த குறுகிய கூரையுடையனவாகக் காட்சியளிக்கின்றன.

குடிசைகளின் முன்னால் வெண்மணற் குன்றுகள் திட்டு திட்டாய்ப் பரந்து கிடக்கின்றன. இரவு நேரம். பால் வெண்ணிலவு தன் குளிர்ந்த ஒளியை வீசிக் கொண்டிருக்கிறது. பரதவர்களிலே இளையவரும் முதியவரும் உறவினர்களோடு கூடிக்கொண்டு, சுறு மீன்களால் கிழிக்கப்பட்ட வலைகளை மெல்லிய நாரினால் தைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பரதவர் வாழும் அந்தப் பக்கத்தில் நள்ளிரவின் அமைதி கெடும்படியாக தேர் ஒன்று பெரிய ஆரவாரத்தை எழுப்பிக் கொண்டு விரைந்து ஓடி வருகிறது. குதிரையின் சதங்கை ஒலியும், பாகன் சுழற்றும் சாட்டையின் ஒலியும், தேரின் உருளைகள் மணலிற் பதிந்து கரகரவென்று கேட்கும் ஒலியும் சேர்ந்து பேரோசையைக் கிளப்புகின்றன. தேரில் ஒரு உருவம் உட்கார்ந்திருப்பது மட்டும் தொலைவிலுள்ளவர்களுக்குத் தெரிகிறது. ஆனால் அது யார் என்று தொலைவில் வலையைத் தைத்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தெரியவில்லை.

தேர் உப்பங்கழிகளையெல்லாம் தாண்டி ஒரு சோலையின் நடுவே போய் நிற்கிறது. வளமும், வனப்பும், தோற்றப் பொலிவுங் கொண்ட ஆணழகன் ஒருவன் தேரை விட்டு மெல்ல இறங்கி மலர்ச் செடிகள் நிறைந்த தோட்டத்தின் பக்கம் வருகிறான். அவன் தான் உப்பங்கழிகளுக்குச் சற்று தொலைவிலே உள்ள மலைநாட்டுச் செல்வக்குடி ஒன்றில் தோன்றிய செம்மல் ஆவான்.

பரதவர் குடிசைகளில் ஆடவரெல்லோரும் மீன் வலையைத் தைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது, பெண்டிரெல்லாம் பகலெல்லாம் வேலை செய்து அலுத்த களைப்பால் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். தேரின் மணி ஓசையும், அதன் ஆரவாரமும் காதில் பட்டவுடனே ஒரு சிறு குடிசையிலிருந்து அழகே உருவான ஆரணங்கு ஒருத்தி ஓசைப்படாமல் மெல்லவெளிவந்து, குடிசையின் ஓரமாய்ப் பதுங்கிப்பதுங்கிச்சென்று இறுதியில் தேர் நிறுத்தப்பட்டிருக்கும் சோலையின் பக்கம் வந்து சேர்கிறாள். பிறகு மலர்த்தோட்டம் பக்கம் செல்கிறாள். அங்கு அவளும் அவனும் ஆரத் தழுவி மாற்றி மாற்றி முத்தமழை பொழிகிறார்கள்.

தலைவனும் தலைவியும் அந்த இரவுக் குறியிடத்தில் எதிர்ப்பட்டு நீண்ட நாட்களாக களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது அந்தப் பக்கத்திலுள்ளவர்களுக்குத் தெரியாது. தோழி ஒருத்திக்குத் தான் தெரியும். அவள் தலைவன்

★ இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ ★

தலைவியாருக்கு உதவியாகவும், பாதுகாப்பாகவும் இருந்து வருகிறாள்.

தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தை நீட்டித்துக் கொண்டு காலங் கழித்துவரும் போது, அழகிய நங்கை ஒருத்தி பக்கத்தில் இருந்து வருவதைக்கேள்வியுற்ற வெளியூரைச் சேர்ந்த அவளது உறவினர் தம்முடைய மகனுக்கு அவளை மணம் முடிக்க எண்ணி பெண் கேட்க வருவது என்ற முயற்சியில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் தாங்கள் பெண் கேட்க வர இருப்பதை முன் கூட்டியே ஏவலாள்மூலம்சொல்லியனுப்புகிறார்கள். அந்த உறவினரை மகிழ்ச்சியோடு வரவேற்கத் தாய் தந்தையாரும், செவிலித் தாயும் மிக மும்முரமாக ஈடுபடுகிறார்கள் வீட்டை அழகு படுத்துவதும், பொருள்களைப் புதுக்குவதும், சாமான்களை ஒழுங்கு படுத்துவதும், விருந்திற்கு ஏற்பாடு செய்வதும், ஆன செயல்களில் தலைவியின் இல்லத்தார் ஈடுபடுகின்றனர்.

உறவினர் சிலர் பெண்கேட்க வர இருக்கும் செய்தி மெல்ல தோழிக்கும் தலைவிக்கும் எட்டுகிறது. தலைவி திடுக்கிட்டுத் திகைத்துப் போய் என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கிறாள்; பெரியகேடு வந்து சூழ்ந்துவிட்டதே என்று எண்ணிக் கையைப் பிசைந்து கொண்டு கண் கலங்குகிறாள். அன்புக் காதலனை விட்டு விட்டு முன் பின் தெரியாத ஒருவனை எப்படி மணந்து கொள்வது என்று மனவேதனையுறுகிறாள். எப்படியும் அந்தத் திருமணத்தை நிறுத்தி விடலாம், அதற்காகத் தலைவி கலங்கிக் கொண்டிருக்கவேண்டாம் என்று தோழி தலைவிக்கு ஆறுதல் மொழி பகர்கிறாள்.

தோழி, செவிலித்தாய் உட்கார்ந்திருக்கும் இடத்திற்குப் போய் அவளிடம் முதலில் பொதுப்படையாகப் பேச்சு கொடுக்கிறாள். பிறகு மெல்ல வினவுகிறாள், "நமது வீட்டில் என்ன சிறப[illegible] நடக்கப்போகிறது? எல்லாவற்றையும் புதுக்கியும் ஒழுங்குபடுத்தியும் எதற்கோ ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறீர்களே! அந்தச் சிறப்பான செய்தி என்ன?" என்று.

"உனக்குத் தெரியாதா அது? அடுத்த ஊரிலுள்ள நமது உறவினர் தம்முடைய மகனுக்கு நமது பெண்ணை மணம் முடிக்க வேண்டி பெண் கேட்க வர இருக்கிறார்கள். அவர்களை வரவேற்கத்தான் இந்த ஏற்பாடுகள் எல்லாம். இந்தச் செய்தி உனக்கு முன்பே தெரிந்திருக்கும் என்றல்லவா எண்ணினேன்!" என்று செவிலி கூறுகிறாள்,

அது கேட்ட தோழி "அப்படியானால் திருமணத்திற்குத் தலைவியின் இசைவைப் பெற்றுவிட்டீர்களா?" என்று வினவுகிறாள்.

"அவளுடைய இசைவைக் கேட்டறிவானேன்? அவளுக்குத்தான் போதுமான பருவம் எய்திவிட்டது. இனிமேலும் அவளைக் கன்னியாகவே வைத்துக்கொண்டிருப்பது முறையல்ல. பெண்கேட்க வருபவர்கள் நமது நெருங்கிய உறவினர். மணமகனை நான் பார்த்திருக்கிறேன். நல்ல அழகும் திறமையும் கொண்டவன், பெரிய செல்வக் குடும்பத்தைச் சேர்ந்தவன். நாம் பார்த்துச் சரி என்றால், பிறகு மகள் என்ன சொல்லப்போகிறாள். இசையத்தானே செய்வாள்!" என்று செவிலி கூறுகிறாள்.

"அவள் இசையாவிட்டால்?"

"எப்படி அவள் இசையாமல் போய்விடுவாள்?"

"அவள் இசையவில்லை என்று வைத்துக்கொள்ளுங்களேன்?"

"இசையவில்லை என்றால் கட்டாயப் படுத்தவேண்டியதுதான்!"

"அவள் இருந்தால்தானே நீங்கள் கட்டாயப்படுத்துவீர்கள்?"

"அவள் இங்கு இல்லாமல் எங்கே போய்விடப்போகிறாள்?"

"அவள் இறந்துவிட்டால்?"

"அவள் இறந்துவிட்டால்?...ஏனடி அப்படித் துக்கச் செய்தி சொல்லுகிறாய்?" என்று செவிலி திகைத்துப் போய்க் கேட்கிறாள்.

"ஒருகால் அப்படி ஏற்படுமோ என்று நான் அஞ்சுகிறேன்." என்கிறாள் தோழி.

"நீ அஞ்சுவதற்கு என்ன காரணம்?"

"காரணம் இருக்கிறது!"

"என்னடி காரணம்? சீக்கிரம் சொல்லேனடி?"

"அவள் வேறொருவரைத் திருமணம் செய்துகொள்ள முன்பே முடிவு செய்துவிட்டாள்!"

"வேறொருவரையா?......" என்று செவிலி பதறிப்போய்க் கேட்கிறாள்.

"ஆமாம்!" என்று தோழி அழுத்தந்திருத்தமாக விடையிறுக்கிறாள்.

"யாரடி அவன்?"

"அவர்தான் பக்கத்து ஊரைச் சேர்ந்தவர்!"

"அவனை எப்படி அவளுக்குத் தெரியும்?"

"நீண்ட நாட்களாகவே அவள் அவரை அறிவாள்!"

"நீண்ட நாட்களாகவே அறிவாளா?"

"ஆமாம்!"

"எப்படியடி?"

"அவர்கள்தாம் களவொழுக்கத்தில் பலநாட்களாகவே ஈடுபட்டிருக்கிறார்களே!"

செவிலி சினம் பொங்க, முகம் சிவக்க, நடுநடுங்கிப் போய் "எனக்குத் தெரியாமல் களவொழுக்கத்தில் எப்படி ஈடுபட்டாள்?" என்று ஆத்திரத்துடன் கேட்கிறாள்.

அதற்குத் தோழி, "உங்களுக்குச்சொல்லிவிட்டா, தலைவி களவொழுக்கத்தில் ஈடுபட

டியும் ? அப்படியானல் அது ...ளவொழுக்கமாகாதே!'' ...ன்று கூறுகிருள்.

''நீயாவது அதைப்பற்றி ...க்கு முன்கூட்டியே சொல்ல ...ண்டாமா ?''

''நீங்கள் தோழியாகவும், நற் ...யும் தந்தையும் தலைவியாக ...தலைவனுகவும் இருந்த அந் ...காலத்தில், நீங்கள் அவர் ...து களவொழுக்கத்தைப் ...றிப் பெற்ருேர்களிடம் ...சால்லிக்கொண்டா இருந்திர் ...ள் ?''

செவிலி பதில் கூற முடியா ...ல் வெட்கப்பட்டு, ''இப்பொ ...து மணம் முடிக்க விரும்பும் ...ணமகன எவ்வளவு பெரிய ...ணக்காரன் தெரியுமா ?'' ...ன்று வினவுகிருள்.

''நீங்கள் கூறும் மணமகனை ...ட, தலைவி தேர்ந்தெடுத்தி ...க்கும் தலைவன் நூறு மடங்கு ...பரும் பணக்காரன் !'' என்று ...தாழி கூறுகிருள்.

''அப்படியா ?'' என்று ...செவிலி வியந்துபோகிருள்.

''ஆமாம்! நீங்கள்கூட பார்த் ...ருக்கலாமே? நாள்தோறும் ...ள்ளிரவில் நான்கு குதிரைகள் ...ட்டிய தேரில் ஒருவர் கடற் ...கரை ஓரமாக மணி ஆரவாரம் ...லம்ப போய்க்கொண்டிருப் ...ரே !'' என்று தோழி கூறுகி ...ருள்.

''ஆமாம் ! ஆமாம்'' என் ...ள் செவிலி.

''அவரேதான் ! அவர் ...தாடர்ந்து வந்துகொண்டு ...தான் இருப்பார்! வருபவர் ...றிதே போகமாட்டார்! அவள் அவருக்கே உரியவள்தான் !'' என்கிருள் தோழி.

''என்ன இருந்தாலும் நற் ருய் நீ கூறும் திருமணத்திற்கு ஒப்புதல் அளிக்கமாட்டாள் !''

''ஒப்புதல் அளிக்காமல், வேருெருவருக்கு அவளைத் திருமணம் முடித்தால், அவள் உறுதியாக இறந்துபடுவாள்!''

''எப்படி அவள் இறந்து விட முடியும் ?''

''எப்படியா? வலையையும் தூண்டிலையும் எடுத்துக் கொண்டு, கடுங்காற்று வீசும் போது, ஆழ்கடலுக்குச் செல் லும், கொலைபோன்ற முரட்டுச் செயல்களைச் செய்யும் பரத இளைஞரோடு அவள் சென்று கடலில் வீழ்ந்து இறப்பாள் !''

தோழி இவ்வாறு சொல்லிய தும் செவிலி நடுநடுங்கிப் போய் விடுகிருள். எப்படியும் மகளைக் காப்பாற்றுவதே முக்கிய நோக்கமாகையால் அவள் விருப்பப்படி திருமணம் செய்ய முயற்சி எடுக்கலாம் என்ற ஆறுதல் மொழியைத் தோழி யிடம் கூறிவிட்டுச் செவிலி நற் ருயைக் காண செல்லுகிருள் !

* * *

இது, நற்றிணை-267ஆம் செய் யுளின் உட்கருத்தைக்கொண்டு எழுந்த காதற்காட்சியாகும். இந்தச்செய்யுள் நெய்தல் திணை யைச் சேர்ந்த 'பிறர் வரைந்து கொள்ள வரும்போது தோழி செவிலிக்கு உண்மை நிலையை எடுத்துரைப்பது' என்ற பிரி வைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றிய புலவர் யார் என்று தெரியவில்லை.

கண்டல் வேலிக் கழிசூழ் படப்பை
முண்டகம் வேய்ந்த குறியிறைக் குரம்பைக்
கொழுமீன் கோள்பவர் பாக்கம் கல்லென
நெடுந்தேர் பண்ணி வரலா னுதே
குன்றத் தன்ன குவவுமணல் நீந்தி
வந்தனர் பெயர்வர்கொல் தாமே அல்கல்
இளையரும் முதியரும் கிளையுடன் குழீஇக்
கோட்சுரு எறிந்தெனச் சுருங்கிய நாம்பின்
முடிமுதிர் பரதவர் மடமொழிக் குறுமகள்
வலையும் தூண்டிலும் பற்றிப் பெருங்கால்,
திரையெழு பௌவம் முன்னிய
கொலைவெஞ் சிருஅர் பாற்பட் டனளே

[நற்றிணை-207]

[பொழிப்புரை : அன்னாய்! உப்பங் ...ழிகள் சூழ்ந்த கண்டல் மரங்களா ...கிய வேலியையுடைய கொல்லை ...யிடை அமைந்த முள்ளிச் செடிக ...ளால் வேய்ந்த குறுகிய கூரையை ...யுடைய சிறு குடில்களையும் கொழு ...த்த மீன் கொள்பவர் உறைகின்ற ...பாக்கமெங்கும் கல்லென்னும் ...ஓசை யுண்டாக நெடிய தேரினை ஓட் ...டிக்கொண்டு நம் காதலர் வருவதை ...நிறுத்திவிட முடியாது. மலைபோன்ற ...குவிந்த மணற்பரப்பைக் கடந்து ...வந்த அவர் தாம் வறிதே இனிப் ...போய்விடுவாரோ ? மாட்டார். இர ...வில் இளைஞரும், முதியவரும் தம் உறவினருடன் கூடியிருந்து கொல்லவல்ல சுருமீன் கிழித்தத னுலே சுருங்கிய நார்களைக்கொண்டு வலையை முடிக்கின்ற முதிர்ச்சியை யுடைய பரதவரின் மடப்பமிக்க மொழியையுடைய இளமகளான இவள் அவருக்கே உரியவள்; அப் படியின்றி வேருெருவருக்குத் திரு மணம் செய்வீர்களே யானுல், வலை யையும் தூண்டிலையும் பிடித்துப் பெரிய காற்று வீசுதலாலே அலை யெழுகின்ற கடலின் கண்ணே செல் லுகின்ற கொலைத் தொழிலையுடைய வெய்ய பரதவர் சிருரோடு சென்று ஒழிந்து படுவாள். இனி வேறு என்ன கூறமுடியும் ?

கண்டல்-ஒருவகை மரம் ; கழி-உப்பங்கழி ; படப்பை-கொல்லை , முண்டகம்-முள்செடி ; இறை-நகூரை; குரம்பை-சிறுகுடில் ; பாக்கம்-கடற் கரையை அடுத்த ஊர் ; குவவு -குவிந்த ; அல்கல்-இரவு ; நாம்பு-மெல்லிய கொடி ; மெல்லிய நார் ; பௌவம்-கடல்.]

* * *

தாய் தந்தையர் தன் மக ளுக்கு வேருெருவரைத் திரு மணம் செய்ய எண்ணினுலும், தலைவி தன் மனதிற்குகந்த காதலனையே திருமணம் செய்துகொள்ள முயலுவாள் என்பதும் இல்லையேல் இறந்து படவே முற்படுவாள் என் பதும், காதல் திருமணச் சிறப்பைக் காட்டுவனவாக இச்செய்யுளில் இனிமையாக அமைந்திருக்கின்றன.

தலைவிக்காகப் பரிந்து தோழி செவிலியிடத்தில் பேசுவதும், செவிலி நற்ருயைத்திருத்தித் தலைவியின் எண்ணத்திற்கு இசைவு தரும்படி செய்வதும் ஆன கடப்பாடுகள் உணர்த் தப் படுகின்றன.

கண்டல் மரங்களைக் கொல் லைக்கு வேலியாக அமைத்தல், முள்ளிச் செடிகளால் கூரை களை வேய்தல், பரதவர் கடற் கரை மணலில் சிறு குடில்கள் அமைத்துக் கொண்டு வாழ் தல், தேரிலே இவர்ந்து செல் லுதல், சுருமீனுல் கிழித்தெறி யப்பட்ட வலைகளை இளையவரும் முதியவரும் மெல்லிய நார் கொண்டு தைத்தல், வலையை யும் தூண்டிலையும் எடுத்துக் கொண்டு மீன் பிடிக்கச் செல் லுதல் போன்ற பழக்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ()

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுதுதான் நிறைவேறுவ தாகவும் நேரு பண்டிதர் கூறி ஞர். பத்திரிக்கைச் செய்திக ளின்படி, ஜப்பான் இந்தியா வுக்கு $14\frac{1}{2}$ கோடி ரூபாய் கடன் கொடுக்க பேச்சு வார்த்தைகள் நடந்துள்ளன. பண்டிதநேரு நேரில் அங்கு சென்றிருக்கும் பொழுது அந் தக் கடன் பேச்சு வந்தால், விவாதிக்கப்படும் என ஜப் பான் பிரதமர் தெரிவித்துள் ளார்.

ஜப்பான் இந்தியாவை விட எவ்வளவோ மடங்கு சிறிய நாடு. அந்தச் சின்னஞ் சிறு நாடான ஜப்பானிடம் கடன் கேட்க வேண்டிய நிலையில் இந் தியா இருக்கிறது.

ஜப்பானைப்போல, யூகோஸ் லேவியாவும் இந்தியாவுக்குக் கடன் தருவதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கி றது என இந்தியாவுக்கு வந் துள்ள யூகோ நாட்டு உதவித் தலைவர் அறிவித்துள்ளார். யூகோஸ்லேவியாவிட மிருந்து இயந்திரங்களையும் பெற்று, அவற்றை ஏழெட்டு ஆண்டுக் காலத்தில் தவணையாகச் செலுத்த கடன் வசதி இந்தி யாவுக்குத் தரப்படுமெனத் தெரிகிறது.

இவ்வாறு அமெரிக்கா போன்ற பெருநாடுகள் மட்டு மல்ல, யூகோஸ்லேவியா, மேற் குசெர்மனி, ஜப்பான் போன்ற சிறு நாடுகளிடம்கூட கடனை எதிர்பார்க்க வேண்டிய நிலை யில் இந்தியா இருக்கிறது.

பெரிய திட்டத்தைப் போட்டு, அதற்கு வேண்டிய நிதியைப் பெறும் வகை தெரி யாமல், ''கடன், கடன்!'' என்று நான்கு திக்குகளிலும் இந்திய அரசாங்கம் தனது ஆட்களை அனுப்பி கேட்க வேண்டியிருக்கிறது! எப்படி யாவது பணம் தேவை என்ற ஆத்திரத்தில், அமெரிக்காவி டம் ஓடி அங்கொரு விதமாகப் பேச வேண்டியிருக்கிறது, ஜப் பானிடம் போய் அந்த ஒரு வகையில் பேச வேண்டிருக்கி றது, யூகோஸ் லேவியாவிடம் ஒரு விதமாகவும் பிரிட்டனிடம் வேருெரு விதமாகவும் பேச வேண்டியிருக்கிறது. திட்டத் தைக் காப்பதாகச் சொல்லி, சமதர்மத்தை காற்றில் பறக்க விட வேண்டியிருக்கிறது, எல் லாம் பணம் படுத்தும் பாடு!

பழம் இருக்கும் மரத்தைத் தேடி வௌவால்கள் அலை யும் என்பார்கள். அதைப் போல இந்தியாவின் ஆளவந் தார்களும் அலைந்து திரிகிருர் கள். மிருகத்தைக் கண்டதும் தானும் ஒரு மிருக மென்றும், பறவைகளைக் கண்டதும் தானும் ஒரு பறவையென்றும் வௌவால் இரண்டு கூட்டத் தையும் ஏமாற்ற நினைத்து, கடைசியாக இரு தரப்பினரா லும் ஏற்றுக் கொள்ளப்படா மல் இரண்டுங் கெட்டான் நிலை யில் விடப்பட்டதாக ஒரு கதை இருக்கிறது. அந்தக் கதையில் வருகிற வௌவாலைப்போல இவர்களும் நடந்து கொள்கி ருர்கள். சமதர்ம நாடுகளைக் காணும்பொழுது தங்களுடைய இலட்சியம் சமதர்மம் தான் எனப் பேசுகிருர்கள். அமெ ரிக்கநாடுகளிடம்போகும்போது ''தேசிய மயமாக்குவது என் பது கிடையாது'' என்று உறுதி மொழியளிக்கிருர்கள். வௌவால்போல, இரண்டுங் கெட்ட அரசியல் கொள் கையை இந்திய அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்டுள் ளது ! ()

வட்டமிடும் "குழந்தைத் திங்கள்"

உலகுக்கு ஒரு புதிய சந்திரன் - குழந்தைத் திங்கள் கிடைத்திருக்கிருன்!

இந்தக் "குழந்தைத் திங்களைப்" பற்றி ஒரு வாரமாக உலக மக்களின் கவனமெல்லாம் திருப்பப்பட்டிருக்கிறது! விஞ்ஞானிகள் வியப்புடன் பேசுகிருர்கள், அரசியல் வாதிகள் பயத்துடன் பார்க்கிருர்கள், பத்திரிக்கைகள் பக்கம் பக்கமாக எழுதுகின்றன, பேரூர்களிலும் சிற்றூர்களிலும், மக்கள் கூட்டங் கூட்டமாக நின்று வானத்தைப் பார்க்கின்றனர், வானிலை ஆராய்ச்சிக் கூடங்களில் உள்ள தொலைநோக்காடிகள் இருண்ட வானைத் துழவியபடி இருக்கின்றன, வானெலி நிலையங்கள் குழந்தைச் சந்திரனின் குரலைப் பதிவு செய்யக் காத்திருக்கின்றன, ஆனல் எதையும் இலட்சியம் செய்யாமல், அந்தக் குழந்தைத் திங்கள் மட்டும் மணிக்கு 16000 மைல் வேகத்தில், பூமியைச் சுற்றி வட்டமிட்டபடி இருக்கிருன்!

இதுவரை இருந்த திங்கள் பழைய திங்களாகி விட்டது; புதுத் திங்களைத் தான் எல்லோரும் தேடித் தேடிப் பார்த்தபடி இருக்கிருர்கள். புதிய "திங்கள்" பூமிக்கு அருகிலே இருக்கிறது. பழைய திங்கள் படுசோமபேரி, புதிய திங்கள் சுறுசுறுப்பு மிக்கவன்! பழைய திங்களுக்குப் பூமியை ஒரு முறைச் சுற்றிவர, ஒரு மாதம் பிடிக்கும், புதிய திங்களோ 96 நிமிடங்களில் ஒரு முறைச் சுற்றி வந்து விடுகிறது. அந்தத் திங்கள் 30 நாளைக்கு ஒரு முறை சுற்றி வந்தால், புதிய திங்கள் அந்தக் காலத்திற்குள் 450 தடவைகள் சுற்றி வந்துவிடும்! அவ்வளவு சுறுசுறுப்பு!

ருஷிய நாட்டிலிருந்து விடப்பட்டுள்ள "குழந்தைத் திங்கள்" இருபதாம் நூற்ருண்டின் விஞ்ஞான வளர்ச்சியில் மிக உன்னதமானதொரு வெற்றியாகும். முதல் தடவையாக பூமியைச் சுற்றி வர "செயற்கைக் கோள்" ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. மிகக் குறுகிய காலத்தில் இவ்வளவு மாபெரும் வெற்றியைக் கொணர்ந்த விஞ்ஞானிகளை எவரும்பாராட்டாமலிருக்கமுடியாது. மேலை நாடுகள் வியக்கும் விதத்தில், அமெரிக்க நாடு திகைக்கும்வகையில், ருஷிய நாட்டுச் செயற்கைக் கோளம் பவனி வந்தபடி இருக்கிறது. உலகநாடுகளனைத்தும் ஒன்றுபட்டு பூமியின் அமைப்பை ஆராய "பூதத்துவ ஆண்டு" என 18 மாதக் காலத்தை ஒதுக்கி, அதில் "செயற்கைத் திங்களை" அனுப்புவது என்று திட்டமிட்டிருந்தார்கள். அந்தத் திட்டத்தில் மற்ற நாடுகளைப் பின்னுக்குத் தள்ளி, செயற்கைத் திங்களை விடுவதில் ருஷியா முன்னணியில் நிற்கிறது. ருஷியாவிலிருந்து விடப்பட்ட செயற்கைக் கோளம் முதல் தடவையாக அடைந்துள்ள வெற்றி மட்டுமல்ல, முதல்தரமான வெற்றியுமாகும்!

சூரியனைச் சுற்றி பூமி வருவதைப்போல, பூமியைச் சுற்றி சந்திரன் வருவதுபோல, புதிய செயற்கைக் 'கோளமும் பூமியைச் சுற்றி வருகிறது. ஈர்ப்புச் சக்திகளின் விதிப்படியும், விரைவில் இயங்கும் பொருள்கள் பற்றிய கணிதப் படியும், புதிய கோளம் பூமியைச் சுற்றி வர விடப்பட்டுள்ளது. பூமிக்கு மிக அருகிலே ஒரு பொருளை விட்டால், பூமியின் ஈர்ப்புச்சக்தி பிரமாண்டமான அளவில் மிகப் பல மடங்கு அதிகம் இருக்கின்ற காரணத்தால், அந்தப்பொருள் வேகம் தணிந்ததும் பூமியை நோக்கி விழுந்துவிடுகிறது. பூமியிலிருந்து தூரம் செல்லச் செல்ல, அந்தப் பொருளைத் தன்னை நோக்கி இழுத்துக் கொள்ளும் சக்தி பூமிக்குக் குறைகிறது. பூமியின் இழுப்புச் சக்தியைச் சமாளிக்கக் கூடிய தூரத்தில், ஒரு பொருளைத் தள்ளி விட்டால், அது (சற்று அழுந்திய) வட்டவடிவத்தில் சுற்றி வந்தபடி இருக்கும். இந்த விதி முறைகள் எண்ணிப் பார்க்கச் சரியாக இருந்த போதிலும், செயல் முறையில் ஈடுபடும்பொழுது பூமியின் இழுக்கும் சக்தியைச் சமாளித்துக்கொண்டு போகக் கூடிய உயரத்துக்கு, ஒரு பொருளை எப்படி அனுப்புவது என்ற ஆராய்ச்சி இருந்தது. இந்த ஆராய்ச்சியில் அடிப்படையாக இருந்தது வான வெடி அமைப்பாகும்.

வான வெடிகள் விடப் படுவதைப் பார்க்கிரேம். அதில் ஒரு குழாயில் மருந்து திணிக்கப்பட்டு இருக்கிறது. திணிக்கப்பட்ட மருந்து எரிய எரிய, அதனல் உண்டாகும் "வெடிச் சக்தி" வானத்தை மேலே அனுப்புகிறது. இந்தக் கொள்கைதான "ராக்கெட்" என்று சொல்லப்படும் வான வெடிகள். விஞ்ஞான முறையில் பலமான வெடி சக்திகளுடன் அவை உண்டாக்கப்பட்டன. செயற்கைத் திங்களை விட்டதற்கும், இங்கிருந்து சந்திரனுக்குச் செல்வதற்கும் ராக்கெட் வெடி அமைப்புதான் முக்கியமானதாக இருக்கிறது.

ருஷியாவிலிருந்து அனுப்பப்பட்ட செயற்கைக் கோளத்தை மேலே உந்திச் செலுத்த. மூன்று வான வெடிகள் (ராக்கெட்கள்) ஒன்றையொன்று அடுத்து வைக்கப் பட்டிருந்தனவாம். முதலில் ஒன்று பல மைல்களுக்கு மேல் கொண்டு போய்ச் சேர்க்க, அதற்குப் பின் மற்ருென்று வெடித்து இன்னும் மேலே எழுப்பிச்செல்லும், இப்படியாக முதலிரண்டு குழாய்கள் வெடித்தபின் மூனருவதுகட்டத்தில் வெடித்த குழாய் பூமியின் இழுக்கும் சக்தி குறைந்த இடத்தில் வெடித்ததால் அது பூமியை நோக்கி விழுந்து விடாமல், அதுவும் சுற்றி வந்தபடியே இருக்கிறது. அறுந்து போன அந்த "வால்" செயற்கைச் சந்திரனுக்கு 700 மைல் பின்னல் வந்து கொண்டே இருக்கிறது!

விஞ்ஞான உலகில் இந்த புது "செயற்கைக் கோளம்" பெரிய வெற்றியாக மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்ட போதிலும், மற்ருெரு புறம் அரசியல் உலகில் இது பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. "செயற்கைத் திங்கள்" பூமியின் தன்மைகளை அறிய ஒரு விஞ்ஞான சாதனமாக இருக்குமேயன்றி, நேரடியாக இராணுவ பலம் எதுவும் அதில் கிடையாது. ஆனல் 185 பவுண்டு கனமான ஒரு செயற்கைக் கோளத்தை 560 மைல்களுக்கு மேல் அனுப்பக் கூடிய முறைகளையும், பலம் வாய்ந்த வான வெடிக் கருவிகளையும் ருஷியாவிடம் இருப்பதானது, அவர்களுடைய இராணுவ பலத்தை அதிகரிக்கச் செய்யும் என்பதில் மேலை நாடுகளுக்கும் மற்ற வல்லரசுகளுக்கும் ஏற்பட்டுள்ளது. "போர் விமானங்களைக் கண்காட்சிப் பொருள்களாக்கும்" நிலைமை உண்டாகியுள்ளது!

விஞ்ஞான உலகம் "பெரிய சாதனை" என செயற்கைக் கோளத்தை வரவேற்கிறது. ஆனல் அரசியல் உலகம் "பெரும் வேதனை" என அதனையே பாக்கிறது!

பிறந்துள்ள "குழந்தைச் சந்திரன்" மனித குலத்துக்கு சிரித்துவிளையாடி, சிந்தனையை வளர்த்து, மகிழ்ச்சியூட்டுவான? அல்லது வளர்ந்தபின்னர், சினத்துடன்பொங்கி உலகத்தை அழித்துவிடக் கிளம்புவான? எது நடக்கும் என்று தெரியவில்லை. "வளர்த்து விடுகிற தாய்தந்தையரைப் பொறுத்துதான் "குழந்தைச் சந்திரனின்" போக்கு இருக்கும்!

செயற்கைத் திங்களைப்பற்றி சில விவரங்கள்.

அனுப்பப்பட்ட இடம், நேரம்: இது இரகசியமாக வைக்கப் பட்டிருக்கிறது. சைபீரிய பாலைவனத்தின் மத்தியில் இக்குட்ஸ்க் என்ற பகுதியிலிருந்து 4—10—57 இரவு 1 மணிக்கு வெடிக்கப்பட்டிருக்கலாமென செர்மன் நாட்டு விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

கோளத்தின் அளவு: 23 அங்குலம் குறுக்களவு உள்ள உருண்டை வடிவம்.

எடை: 185 பவுண்டுகள். (இந்தியாவில் நல்ல பருமனுள்ள ஆட்கள் சராசரி 150 அல்லது 150 பவுண்டு எடை இருப்பார்கள்.)

சென்றுள்ள உயரம்: பூமியிலிருந்து 560 மைல்களுக்குமேல் அது சுற்றிவருகிறது.

செல்லும் வேகம்: மணிக்கு 16,000 மைல் வேகத்தில் அது வட்டமிட்டு வருகிறது. பூமியைச் சுற்றிவர அதற்கு 96 நிமிடங்கள் பிடிக்கின்றன.

செல்லுகின்ற பாதை: இது இன்னும் சரியாகக் கணிக்கப் படவில்லை. ஏறத்தாழ 26,000 மைல்கள் சுற்றளவுள்ள சற்று அழுந்திய வட்டவடிவமாக இருக்கலாம.

உருண்டைக்குள் இருப்பவை: ரேடியோ கருவிகளும் வேறு சில நுட்பக் கருவிகளும் இருக்குமெனத் தெரிகிறது.

பார்க்கக்கூடிய தன்மை: அமெரிக்காவிலும் ஜப்பானிலும் டெலஸ்கோப்மூலம் பார்த்ததாகச் சொல்கிருர்கள். சூரிய வெளிச்சத்தில் அதைக் கண்டுபிடிப்பது முடியாத காரியம் என வானிலை நிபுணர்கள் கூறுகிருர்கள்.

வெடிக் குழாய்: வெடித்த கடைசிக் குழாய், செயற்கை திங்களுக்குப் பின் 700 மைல் தூரத்தில் ஓடிவந்தபடி இருக்கிறது.

நீடித்திருக்கும் காலம்: சில வாரங்களுக்கு, மாதங்களுக்கு இருக்கலாம், அல்லது சிலரின் கூற்றுப்படி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு சுற்றியபடி இருக்கலாம். சரியாகக் கூறமுடியவில்லை. வேகம் தடைப்பட்டு, உயரம் குறைந்து, கீழே விழ ஆரம்பித்தால், கனமான காற்று வெளியில் நுழையும்பொழுது, விழும் வேகத்தில் காற்றுடன்மோதி வெப்பம் அதிகமாகி, எரிந்து சாம்பலாகிவிடும்!

மேலான பார்வைக்கு

மகா கனம் பொருந்திய, இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவகர்லால் நேருவின் மேலான பார்வைக்கு, மேலூர் " பத்திரிக்கைக் கார ஐயா " பஞ்சனதம் எழுதிக்கொண்டது.

என்னைப் பற்றி உங்களுக்குச் சரியாக, ஞாபகம் இருக்கிறதோ, இல்லையோ! ஹரிபுரா காங்கிரசிற்கு நான் வந்திருந்தேன். நீங்கள் பிரசங்கம் செய்து விட்டு இறங்கி வந்தபொழுது; நான்தான் வழியை விலக்கி, உங்களை அழைத்துப் போய்க் காரில் ஏற்றி உட்காரவைத்தேன். நீங்கள்கூட என் முதுகில் தட்டிக்கொடுத்து, "நமஸ்தே!" என்று புன்முறுவலுடன் சென்றீர்கள். இப்பொழுது ஞாபகம் இருக்கிறதா?

இந்த மேலூர் கிராமத்தில் நான்தான் பத்திரிக்கை ஏஜண்டாக இருக்கிறேன். பத்திரிக்கைகளைப் பட்டு வாடா செய்வதுகூட நானேதான். பத்திரிக்கை வாங்குகிற சிலருக்கு நான்தான் பத்திரிக்கையைப் படித்துக் கூடச் சொல்லவேண்டும். என்ன செய்வது? அப்படிப் படித்துக் காட்டினால் தான் அந்த இரண்டு பத்திரிக்கைகள் விற்பனையாகும். எங்கள் ஊருக்குப் பத்திரிக்கை நிருபர்கூட நான் தான். ஒரு பத்திரிக்கையின் எல்லா வேலைகளையும் நான் செய்வதால், இங்கு இருப்பவர்கள் "பத்திரிக்கைக்காரரையா!" என்று கூப்பிடுவார்கள்.

நீங்கள் சமீபத்தில் பத்திரிக்கைக்காரர்களைப் பற்றிப் பேசியதைப் படித்தேன். " பத்திரிக்கைக் காரர்கள் இப்பொழுதெல்லாம் பரபரப்பான, திடுக்கிடத்தக்கச் செய்திகளைத் தேடியலைகிறார்கள். ஒரு குடும்பம் நிம்மதியான முறையில் வாழ்கிறது என்றால், அதைப்பற்றிப் பத்திரிக்கையில் எதுவும் வராது. அந்தக் குடும்பத்தில் ஒரு கொலை விழுந்தால் போதும், பத்திரிக்கைகள் கொட்டையெழுத்துக்களில் அதைப்போடும்" என்று நீங்கள் பேசியிருக்கிறீர்கள். இது மிகவும் உண்மையான சங்கதி! மேலூரிலும், அதன் பக்கத்திலுமுள்ள கிராமங்களில் நடைபெறும் பல காரியங்களைப்பற்றி நான் எழுதி, பத்திரிக்கைகளுக்கு அனுப்புகிறேன். அவைகள் எதையும் அந்தப் பத்திரிக்கைகள் போடமாட்டேனென்கிறார்கள்.

"நேற்றைய தினம் இங்கு மப்பும் மந்தாரமுமாயிருந்தது. இரவு இரண்டு நாழிகை நல்ல மழை பெய்தது. காலையில் நடவு வேலை நடைபெற்றது. பட்டாமணியக்காரர் வீட்டில் வேலை செய்யும் பக்கிரியின் மூத்த மகளுக்கு ஒரு குழந்தை இன்று காலை பிறந்தது. இரண்டு நாளைக்கு முன் காலடிபட்டுப் படுத்துக் கிடந்த கோயில் மாடு பழையபடி நன்றாக நடமாடுகிறது. திருக்குளத்தில் இருக்கும் படிக்கட்டுகளில் பாசி நன்றாகப் படிந்திருக்கிறது, குளிக்கப் போகிறவர்கள் கால் வைத்ததும், மிகச் சுலபமாக வழுக்கிக் கொண்டேபோய் குளத்தின் ஆழத்தில் போய் சேர்த்துவிட முடியும். இந்த ஊருக்குப் புதிதாக நான்கு பார வண்டிகள் வந்துள்ளன." இப்படியாக நான் மேலூர் கிராமத்தைப் பற்றி ருசிகரமான சம்பவங்கள் பலவற்றைப் பார்த்து விட்டு,-நேரில் இருந்து பார்க்கக் கூடியவைகளைப் பார்த்து, இல்லாவிட்டால் நம்பிக்கையானவர்களை விசாரித்துக் கேட்டு - செய்திகளை அனுப்புகிறேன். ஆனால் பட்டணத்திலிருக்கிற பத்திரிக்கைகள் கட்டுப்பாடாக நான் அனுப்புகிற செய்திகளைப் போடாமல் இருக்கிறார்கள். இந்த சங்கதிகளையெல்லாம் இங்கு இருப்பவர்கள் எவ்வளவு ஆவலுடன் கேட்கிறார்கள் என்பது பத்திரிக்கைக்காரர்களுக்குத் தெரியவில்லை.

பக்கத்து கிராமத்தில் எனக்குப் போட்டியாக ஒரு பத்திரிக்கைக்காரன் இருக்கிறான். அவன் ஏதாவது " இந்த ஊரில் மூன்று கண்ணுள்ள எருமைக் கன்றுக் குட்டிப் பிறந்தது, பிறந்ததும் இறந்துவிட்டது. ஊரார் எல்லாம் அதிசயத்துடன் பார்க்கிறார்கள் " அல்லது " பெரிய பண்ணைக்குச் சொந்தமான தோட்டத்தில் ஒரு வாழை மரத்தில் இரண்டு தார் வெடித்திருக்கிறது!" என்று, நடந்ததோ இல்லையோ, ஒன்றை எழுதியனுப்புகிறான் பட்டணத்துப் பத்திரிக்கைகள் அதையெல்லாம் போடுகின்றன. எனக்கு ஒன்றும் புரியவில்லை. நீங்கள் பேசியபின் தான், இந்தப் பத்திரிக்கைகள் ஏன் அப்படி நடந்துகொள்கின்றன என்று தெரியவருகிறது.

நீங்கள் சொல்லியது எல்லாம் சரியானதுதான. " திடுக்கிடத்தக்க, பரபரப்பான செய்திகளைத்தான பத்திரிக்கைக்காரர்கள் தேடுகிறார்கள் " என்று சொன்னது சரியான உண்மை. ஆனால் உதாரணமாக குறிப்பிட்டீர்களே, 'ஒரு குடும்பம் நிம்மதியாக வாழ்கிறதென்றால், அதைப்பற்றி பத்திரிக்கையில் எதுவும் வராது. அந்தக் குடும்பத்தில் ஒரு கொலை விழுந்தது என்றால், பத்திரிக்கைகள் கொட்டையெழுத்தில் போடும்!" என்று. அது முற்றிலும் சரியானதல்ல. இப்பொழுதெல்லாம், நமது நாடு இருக்கிற நிலைமையில், கொலை கொள்ளை, மோசடி ஏமாற்று இவைகளெல்லாம் சர்வசாதாரணமாக ஆகிவிட்டன. அவைகளில் பரபரப்பு எதுவும் கிடையாது. " ஒரு குடும்பம் நிம்மதியாக வாழ்கிறது " என்பது தான் பரபரப்பான, ஆச்சரியமான செய்தியாகும். இப்பொழுதுள்ள வரிகள், விலைவாசி ஏற்றங்கள், தட்டுப்பாடு, கட்டுப்பாடு, பஞ்ச நிலைமைகள் இவைகளை மீறி, " நிம்மதியாக " இருப்பது என்பது என் போன்றவர்களுக்கு ஆச்சரியமானதாக இருக்கிறது. " நிம்மதியாக வாழ்வது " என்பது முன்பெல்லாம் அடக்கவொடுக்கமாக அமைதியாக இருப்பதைக் குறிப்பிட்டது. இப்பொழுது நமது நாடு இருக்கிற நிலையில், " நிம்மதியான வாழ்வு " என்பது அதிசயிக்கத்தக்க ஒன்றாகும். " நிம்மதியான குடும்பம் " என்பதைப் படம் பிடித்துப் போட்டாலே, சினிமாப் படங்களைப் பார்ப்பதுபோல, கூட்டங்கூட்டமாக வந்து பார்த்துவிட்டுப் போவார்கள்.

வாழ்வில் மருந்துக்குக்கூட நிம்மதி என்பது இல்லாமற்போய்விட்டது. அதனால்தான் நிம்மதி உண்டாகச் சிலர் விதவிதமான மருந்துகளையும் இலேகியங்களையும் சாப்பிட ஆரம்பித்துவிடுகிறார்கள்-

இந்தக் கடிதத்தை எழுதியதால் உங்களுடைய நிம்மதியை நான் கெடுத்துவிட்டதாக ஆகக்கூடாது. பாரதத்தின் தவப்புதல்வராக இருக்கும் நீங்கள் நிம்மதியாக இருந்தால், அதுவே எங்களுக்கெல்லாம் பாக்கியமாக இருக்கும்.

தங்களை மீண்டும் ஒரு முறைப்
பார்க்க விரும்புகிற மேலூர் பத்திரிக்கை நிருபர்

பஞ்சனதம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காணபபடுவர். எனவே இதிலிருந்து இந்தியாவில் பெரும்பான்மையோர் இந்தி மொழி பேசுகிறார்கள் என்ற கூற்று அர்த்த மற்றதும், ஆதாரமற்றதுமாகும் என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

இந்தியத்துணைக் கண்டத்திலுள்ள வணிகர்கள்-படித்தவர்கள்-அரசியல் தலைவர்கள்-அறிவியலறிஞர்கள் ஆகியோரைத் தனித்தனியாக வைத்துக்கொண்டு பார்த்தாலும் இந்தி மொழி பேசுவோர் சிறுபான்மையோராகவும், மற்ற மொழிகள் பேசுவோர் பெரும்பான்மையோராகவுந் தான் இருப்பார்கள். அத்தகையோர்களைத் தனித்தனியாக வைத்து அவர்களில் பெரும்பாலோர்க்கும் புரிந்த மொழி எதுவாக இருக்கும் 'என்று ஆராய்ந்துபார்த்தால், அது ஆங்கிலமாகத்தான் இருந்து வருகிறதேயல்லாமல், இந்தி அல்ல.

பலபேர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒருவன் தோற்றத்திலே பருத்து காணப்படுகிறான்; ஆனால் அறிவு ஆற்றலிலே குறைந்து காணப்படுகிறான். அவன் பருத்திருக்கிறான் என்ற ஒரு காரணத்தைக் கொண்டே முட்டாளான அவனை ஆற்றலும் அறிவும், பண்பும் நிரம்பி பலர்க்குத் தலைவனாக ஆக்கி விட முடியுமா? மற்றவர்களின் மதிப்பிற்குரிய தலைவனாக ஆ தற்குப் பருமன் ஒன்றுமட்டு போதுமானதாகி விட முடி யுமா? அறிவுரை கூறி வழிகாட் டும் ஒரு தலைவனைத் தேர் தெடுக்க வேண்டுமானால், அவ னுடைய அறிவையும், ஆற்ற றலையும், பண்பையுந்தான் கணக்கிடுவார்களேயல்லாமல் பருமனைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்களே!

அறிவையும், ஆற்றலையும் கவனிக்காமல் பருமனை மட்டும் பார்த்து ஒருவனைத் தலைவனாக் கினால் அது எவ்வளவு கேலிக் குரியதாகுமோ, அவ்வளவு கேலிக்குரியதாகும் இலக்கண- இலக்கிய-கலைச் சொற்கள்-அறி வியற் சொற்கள் அற்ற இந் தியை, அதன் பருமனை மட்டும் கணக்கிட்டுக்கொண்டு, அதனை விடப் பலவகையினும் சிறந்த மொழிகளுக்கு அதனைத் தலை மைமொழியாக்கி, அதனை அர சியல் மொழியாகவும், பொது மொழியாகவும் கொள்வது.

எனவே இந்தி மொழி மிக வானர்களால் பேசப்படுகிற மொழி என்பது உண்மையற்ற தும், கவைக்குதவாததுமான கூற்றாகும்.

—இரா. நெ.

"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன், எம். ஏ.—(தொலைபேசி எண்: 55697)